# புதியவன்
පුදියවන් PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்–உண்மை அறிந்து சொல்வேன்

◆பாதை 01 ◆பயணம் 77 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 26 வெள்ளி , 09/05/2014



நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை, மன்னார்.
*டிஜிட்டல் பிரின்ரிங் (Banner & Sticker)
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.
தொலைபேசி- 023-2223545,
மின்னஞ்சல் :- nithithilam31@gmail.com

www.putheyavan.com

PUBLIC LIBRARY JAFFNA


# இலங்கைமீதான ஐ.நா விசாரணை தாமதம் தீர்மானம் கொண்டு வந்த நாடுகள் கவலை

(கொழும்பு)
இலங்கை மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25-வது கூட்டத் தொடரில் தீர்மானத்தை கொண்டு வந்த நாடுகள் சிலவற்றுக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்டமீறல்கள் குறித்த விசாரணைகளை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் மூலம் மேற்கொள்ள வேண்டும் என ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் 27ம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆறு கிழமைகள் கடந்துள்ள போதிலும், இவ்விசாரணைகளை மேற்கொள்வதற்கான பொறிமுறை இதுவரை உருவாக்கப்படவில்லை.
ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றார்.

ஆயினும், இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறை தொடர்பிலான அதிகாரபூர்வ அறிவிப்பு இம்மாத இறுதிக்குள் வெளியாகும் என்று எதிர்பார்க்க முடியவில்லை என ஜெனிவாவில் உள்ள (11 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளை நினைவு கூர முயற்சித்தால் சட்ட நடவடிக்கை அரசாங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)
தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கமாக கருதப்படுகின்ற நிலையில், உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை நினைவு கூருவதற்கு முயற்சித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.
அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் எந்தவொரு அமைப்புகளும் முயற்சிக்கக் கூடாது என்று அவர் குறிப்பிட்டார்.
வடமாகாண சபை, உயிரிழந்த முன்னாள் போராளிகளை நினைவு கூரு முயற்சிப்பதாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த கருத்தை வெளியிட்டார். (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் பிரெட்ரிக்கா ஜேன்ஸிக்கு எதிராக பிடியாணை

(கொழும்பு)
சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் பிரெட்ரிக்கா ஜேன்ஸ்'க்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.
ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தொடர்பில் தவறான செய்திகள் பிரசுரமாவதாகத் தெரிவித்து, சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர்களான லசந்த விக்ரமதுங்க, பிரெட்ரிக்கா ஜேன்ஸ் மற்றும் பதிப்பாளர் லால் விக்கிரமதுங்க ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.
(11 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

(கொழும்பு)
பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.
தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறிமுறைமையாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவினை அரசாங்கம் நோக்குகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
(11 ஆம் பக்கம் பார்க்க)

## சமூக வலைத்தளங்கள் தடை செய்யப்பட மாட்டாது ஜனாதிபதி



(கொழும்பு)
சமூக வலைத்தளமான டுவிட்டர் ஊடாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பதிலளித்துக் கொண்டிருக்கிறார்.
இலங்கையில் ச[illegible] வலைத்தளங்கள் தடை [illegible] மாட்டாதென ஜனா[illegible] மஹிந்த ராஜபக்ஸ [illegible] வித்துள்ளார்.
டுவி[illegible] இணை[illegible] இல[illegible]கயில் சமூக வலைத்தளங்கள் தடை செய்யப்படுமா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த ஜனாதிபதி, பேஸ்புக்கில் தனக்கு 3 லட்சம் பேரின் விருப்பங்கள் இருப்பதாகவும் டுவிட்டரில் 25 ஆயிரம் பேரின் விருப்பங்கள் இருப்பதாகவும்

[illegible]தெரிவித்துள்ள ஜனாதிபதி [illegible]அப்படி இருக்கையில் ஏன் சமூக வலைத்தளங்களை தடை செய்ய வேண்டும் எனவும் (11 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகளுக்கு உதவ தயார் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

முன்னாள் போராளிகளுக்கு உதவிகளை வழங்கத் தயார் என சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அறிவித்துள்ளது.
புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு உதவிகளை வழங்கத் தயார் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக் கிளைத் தலைவி சிரினி போலினி தெரிவித்துள்ளார்.
(11 ஆம் பக்கம் பார்க்க)


Ishara Motors
Spare parts sales dealer for David Pieris Motor Company
Distributor for MRF Tyre & Tube David Pieris Motor Company Ltd
T.p-023 2223464 Mob : 077 7949106 E-mail : isharamotorsmn@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........

# மன்னாரில் தொடர்ந்தும் கால்வாய் நோய்த்தாக்கம் கால்நடை திணைக்களம் அறிவிப்பு

(அலுவலகச் செய்தியாளர்)
மன்னார் மாவட்டமானது இலங்கையில் பொலன்னறுவை மாவட்டத்திற்கு அடுத்ததாக கால்வாய் நோய்த்தாக்கத்திற்கு உட்பட்ட மாவட்டமாக காணப்படுகிறது. இந் நோயானது வவுனியா மாவட்டத்திலிருந்து மடு பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பரவி பின்னர் மன்னாரின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் பரவியது.

இந் நோயானது மன்னார் பிரதேச செயலாளர் பிரிவினுள் கட்டைக்காடு கிராமம் மூலமாகவும், மாந்தை மேற்கின் வட்டக்கண்டல் கிரமத்தினுடாகவும் பரப்பாங கண்டல் , உவித்தராசன் குளம் போன்ற பிரதேசங்களுக்கு பரவியது. மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் இந்த நோய் இன்றுவரை 33 பண்ணைகளின் 95 மாடுகளில் நோய் அடையாளம் காணப்பட்டுள்ளது அத்துடன் இந்த நோயினால் 6 மாட்டுக்கன்றுகள் இறந்துள்ளன. இந்த நோயானது தற்பொழுது பரப்பாங்கண்டல், உயித்தராசன் குளம், தண்ணீர்தாங்கியடி, இலந்தமோட்டை, புதுக்குடியிருப்பு, முதலைகுத்தி, புதுக்கமம், கட்டுக்காரன் குடியிருப்பு, வட்டுப்பித்தான்மடு போன்ற கிராமங்களில் காணப்படுகிறது.

இந்த நோயை கட்டுப்படுத்தும் முகமாக தை, மாசி மாதங்களில் மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது இருப்பினும் சில பண்ணையாளர்கள் இந்த தடுப்பூசியினை தங்கள் மாடு களுக்கு ஏற்றிக்கொள்ளாத படியால் தடுப்பூசி ஏற்றாத மாடுகளில் இந்நோய் பரவிவருகிறது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இல 59-ம் 1992-ம் இலக்க விலங்கு நோய்ச் சட்டத்தின் 2ம் பிரிவின் 5 ம் அத்தியாயத்தில் குறிப் பிடப்பட்டதன் பிரகாரம் கால்வாய் நோயின் பரவலை கட்டுப் படுத்துவதற்காக பசு மாடு, எருமை மாடு, ஆடு, பன்றி போன்ற விலங்குகள் , இந்த விலங்கு சார் உற்பத்திப்பொருட்களை எடுத்துச் செல்லல் 14.03.2014 அன்றிலிருந்து மன்னாரில் தடைசெய்யப்பட்டதுடன் இத் தடை பற்றி நகர சபை, பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அறிவிக்கப் பட்டது.

வவுனியா மாவட்டத்தில் இத் தடையானது 28.01.2014 அமுல் படுத்தப்பட்டு இத் தடையானது 09.04.2014ம் திகதியன்று சில நிபந்தனைனகளின் பிரகாரம் நீக்கப்பட்டுள்ளது இருப்பினும் மன்னார் மாவட்டத்தில் கால்வாய் நோய்த் தாக்கமானது காணப் படுவதால் இந் தடையினை நீக்கமுடியாதுள்ளது.

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமானது இந் நோயை கட்டுப்படுத்துவது தொடர்பாக பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதுடன், தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள், இந் நோய் பரவல் தொடர்பான வாராந்த அறிக்கைகளை பேராதனை மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு அறிக்கையிட்டு விழிப்பாக உள்ளது.
இந் நோயினால் கால் நடைப் பண்ணையாளர்களே மிகவும் பாதிப்படைவதால் நோய் பரவுவதை கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியமாகும்.
இருப்பினும் இந் தடையானது கால்வாய் நோயின் பரம்பல் மற்றும் நுகர்வோர் நலன் கருதி விலங்கு நோய்ச் சட்டத்திற்கு அமைவாக இத் தடையினை அகற்றுதல் தொடர்பாக உரிய காலத்தில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப் படுமென மன்னார் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

## கள்ளக்காதலால் வீதிக்கு வந்த பிள்ளைகள் கலியுகத்தில் இப்படியுமா?

(அலுவலகச் செய்தியாளர்) . கள்ளக்காதலினால் கட்டிய கணவனையும் கைக்குழந்தை களையும் கைவிட்டு காதலலுடன் தலை மறைவாகினார் குடும்பப் பெண் இதனால் அனாதரவான 04 பிள்ளைகள் பொலிசாரின் உதவியுடன் மீட்கப்பட்டு சிறுவர்கள் காப்பகத்தில் சேர்க் கப்பட்டனர்.

இப்பர்தாப சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது பாலியாறு வெள்ளாங்குளம் பகுதியில் வசித்து வந்த தம்பதியினருக்கு 04 ஆண் பிள்ளைகள் அவர்களின் வயதுகள் முறையே 13,12,03,01 ஆகும். குறித்த தம்பதியினரில் மனைவி A-32 வீதித்திருத்த வேலைகளில் ஈடுபட்டு வரும் C.M.L நிறுவனத்தில கடமை புரிந்து வந்தார்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இவர் அந்த ஊரில் வசிக்கும் இன்னொருவருடன் கள்ளத்தொடர்பை வைத்திருந்ததாக கூறப்படுகிறது இச்சம்பவங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக இவர் கள்ளத் தொடர்பை வைத்திருந்ததாக கூறப்படும் நபரின் மனைவியின் சகோதரரால் கடந்த மாதம் 21ம் திகதி இப்பெண்ணின் தலைமுடி அறுக்கப்பட்டது.

இதுதெபடர்பாக இலுப்பக்கடவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு இவரது தலைமுடியை அறுத்த நபர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து குறித்த பெண்ணும் அவரது கள்ளக்காதலனும் கிராமத்திலிருந்து தலை மறைவாகியிருநிதனர். குறித்த பெண் தனது நான்கு பிள்ளைகளையும் கணவரையும் கைவிட்டே கள்ளக்காதலனுடன் சென்றிருந்தார். இந்நிலையில் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரேமரத்ன கடமைநிமித்தம் மன்னாருக்கு வந்து கொண்டிருந்த போது மாந்தைச் சந்தியில் அனாதரவான நிலையில் மூன்று சிறுவர்கள் நின்று கொண்டிருப்பதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுவர்களை விசாரித்த போதே அவர்கள் யாரென தெரிய வந்துள்ளது. சிறுவர்களிடம் மேற்கொண்ட விசாரணையிலிருந்து தாயார் அடம்பன் பகுதியில் இருப்பதாக தெரியவந்து கைதுசெய்யப்பட்டு நேற்றைய தினம் பொலிசாரினால் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டார்.

அச்சந்தர்ப்பத்தில் மன்றில் சமூகமாயிருந்த சிறுவர் நன நடத்தை அதிகாரி குறித்த சிறுவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பாடசாலைக்கு செல்லும் வயதிலுள்ள முதல் இரண்டு பிள்ளை களையும் சிறுவர் இல்லத்தில் சேர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கிய நீதவான் ஆனந்தி கனகரட்ணம் சந்தேக நபரான குறித்தபெண்ணை இருபதினாயிரம் பெறுமதியான சரீரப்பிணையில் செல்லுமாறு ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமை பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பம் இடுமாறும் கட்டளை பிறப்பித்தார்.

## வங்காலை அஞ்சல் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் அமையப் பெறுமா?

(அலுவலகச் செய்தியாளர்)
மன்னார் மாவட்டத்தில் வங்காலை கிராமமானது அதிக மக்கள் தொகையைக் கொண்ட கிராமமாகும் இக் கிராமத்தில் அஞ்சல் சேவை சிறப்பாக இயங்கி வருகின்றது.

அத்துடன் வஞ்சியன்குளம், நறுவிலிக்குளம், போன்ற அயல் கிராமங்களையும் இச் சேவை கொண்டுள்ளது இந்த அஞ்சல் அலுவலகம் நீண்ட காலமாக நிரந்தர கட்டிடமின்றி சிறிய அலுவலகமாக நானாட்டான் பிரேதேச சபைக்குட்பட்ட பழைய கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

அஞ்சல் அலுவலகத்துகென ஒன்றிணைக்கப்பட்ட சங்கங்களின் சமாசம் ஊடாக பல இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஒருங்கமைக்கப்படும் அதிகாரிகள் ஒத்துழைப்பு இன்மையால் அம்முயற்சி கைகூடவில்லை, பெரிய கிராமத்தில் அஞ்சல் அலுவலகத்திற்கென ஒரு நிரந்தர கட்டிடம் இல்லாமல் இயங்கி வருவது சாலச்சிறந்ததல்ல காலத்தின் தேவையைப் பொறுத்தும் மக்களின் அன்றாட தேவையின் பொருட்டும் புதிய அஞ்சல் அலுவலக கட்டிடம் அமையப் பெறுவது நல்லதாகும் கிராமம் புதிய அஞ்சல் அலுவலக கட்டிடத்தை எதிர்பார்த்து பல வருடங்கள் உருண்டோடியுள்ளன.

இக்கட்டிடம் அமையப் பெற எந்த சமூக அமைப்பும், அருட்பணி பேரவையும் இதுவரை எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்க வில்லை சம்மந்தப்பட்ட அதிகாரிகளே புதிய அஞ்சல் அலுவலக கட்டிடம் அமையப் பெற உதவுங்கள். இந்நடவடிக்கை மூலம் அஞ்சல் சேவை மேலும் வளம் பெறும் சமூகமும் பயனடையும்.

## செஞ்சிலுவைசங்கதினத்தை முன்னிட்டுஇரத்ததான முகாம்

(அலுவலகச் செய்தியாளர்)
இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை ஆதரவுடன் பேசாலை அலகு பேசாலை பத்திமா கழகத்தின் அனுசரனையுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை யொட்டி நேற்று 08.05.2014 வியாழக்கிழமை பேசாலை வைத்தியசாலையில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்றை நடத்தியது இதில் 42 கொடையாளிகள் குருதிக் கொடை வழங்கினர் வவுனியாவில் இருந்து இரத்தவங்கி வரவழைக்கப்பட்டது.

வைத்தியர்கள், தாதிகள், இலங்கை செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் என 20 பேர் கலந்து கொண்டனர். பேசாலை அலகுத்தலைவர் சீலன் குலாஸ் ஒழுங்கமைப்பில் மன்னார் பிரிவுத் தலைவர் கண்ணா, கிளைத் தலைவர் கெனடி, கிளைச்செயலாளர் ரகுசங்கர் ஆகியோருடன் தொண்டர்களும் கலந்து சிறப்பித்ததுடன் இதன் ஒழுங்கு படுத்தலை சிறப்பாக பேசாலை பத்திமா கழகம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கழகத்தின் உறுப்பினர்கள் முழுமையாக ஈடுபட்டனர். கொடையாளிகளுக்கு குளிர்பானம், சிற்றுண்டி என்பன வழங்கப்பட்டு 2.00 மணியளவில் நிகழ்வு நிறைவு பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன் PUTHEYAVAN
இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

## தமிழர் தாயகத்தின் தலைவிதி எங்கே?

இலகையில் உள்ள தேசிய இனக்குழுமத்தில் நீண்டவரலாற்றையும். தொன்மை இலக்கியவளத்தையும் உயர்ந்த பண்பாட்டையும், நாகரிகத்தையும் கொண்ட இவ்வினம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகவாழ்வியல் உரிமைக்காக பல்வேறு போராட்டங்களை நடாத்திவருகிறது.

இவற்றை காலத்துக்குகாலம் பன்நாட்டு அரசுகளின் உதவியுடன் இலங்கை அரசாங்கம் அடக்கிஒடுக்கி இன அழிப்பைமேற்கொள்கிறது. இதற்குமுடிவே இல்லயா? அரசுதமிழர்களின் தனித்துவம் இருந்துவிடக்கூடாதுஎன்பதே இதன் அடிப்படைநிகழ்ச்சிநிரலாகும்.

இலங்கை சுதந்திரத்திற்கு முன்னர் தமிழ் மக்கள் சகலநிர்வாக நிலையிலும் முதன்மை பெற்றுவிழங்கியதுடன் முடிவெடுக்கும் அதிகாரஅந்தஸ்திலும் இருந்தார்கள். பின் படிப்படியாகபௌத்த ஏகாதிபதியம் மேலோங்கி தமது இனவாத மேட்டிமையை நடைமுறைப்படுத்த தொடங்கி விட்டது.அன்று தொடங்கியநில் அபகரிப்பும், இனச் சுத்திகரிப்பும் இன்று வரை தீர்வின்றிநீழுகிறது.

அரசாங்கம் தமிழ் மக்களை என்னதான் செய்யப் போகிறது என்பதை வெளிப்படையாகவே கூறிவிட்டால் தமிழர்களும் தமது அடுத்த நிலையை தீர்மானிப்பவர்களாக மாறலாம் ஆனால் சர்வதேசததிற்கு ஒருகதையும், தேர்தல் காலத்தில் இன்னெரு பசப்புவார்த்தையும்,தமிழ்த் தலைவர்களுடன் ஏமாற்றுப் பேச்சுவார்த்தையும் எனஎண்ணற்ற நாடகத்தை மாறி மாறி ஆட்சிக்கு வருபவர்கள் அரங்கேற்ற தவறுவதில்லை.

எனவே 2002 புலிகள் ரணில் விக்கிரமசிங்க ஒஸ்லோ ஒப்பந்தத்தின் மூலம் நோர்வையை நம்பி ஏமாந்துபோனார்கள்,

இதற்குமுன் இந்தியாவை நம்பி ஏமாற்றபட்ட தமிழர் தரப்பில் இந்தியஎதிர்ப்பு இன்றுவரை வலுப்பெற்றுள்ளது. அதேபோல் யுத்தநிறைவில் இந்தியாவில் மத்தியில் ஆட்சிமாற்றத்தால் எமக்கு விமோசனம் கிடைக்கும் என எதிர் பார்த்தனர்.

அதையும் தாண்டி அமெரிக்கா முள்ளி வாய்க்காலில் எம்மைமீட்கும் அதனாலாவது எமது நீண்டகால போராட்டத்திற்கு முடிவுகிட்டும் எனமிகவும் ஆழமாக எதிர்பார்த்தனர். எல்லாம் தவிடுபொடியாகின.


அத்துடன் புலிகள் இல்லை.

எனவே தமிழர்கள் இனியாரை நம்புவது? புலிகளால் உருவாக்கம் பெற்ற கூட்டமைப்பும் பலகுழப்பத்தில் மிதவாதம் . ஆயுததாரம் ,இந்தியசார்பு, உச்சதமிழ்த்தேசியம், இருட்டு தமிழ்தேசியம் என பதவி பங்குதாரர் நிலையாகி விட்டது.

அதற்குள் மற்றொரு நம்பிக்கை ஜெனிவா. அதுவும் நிச்சயம் ஏமாற்றும் என்பது திண்ணம். தமிழர்கள் இனிஎங்கேபோவது? யாரிடம் போவது? யாரிடம்போவோம் யாருக்கு எடுத்துரைப்போம்?,எங்கெழுந்திருப்போம்? இனி நாம் என்ற நிலை தானா எமக்கு?

# வீட்டுத்திட்டத்துக்கான மணல் பெறுகையில் கையூட்டு வாங்கும் பொலிஸார்!

## வைத்தியகலாநிதி சி.சிவமோகன் சாடல்!



முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீட்டுத்திட்டங்களுக்கு தேவையான மணலை பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி உள்ளதாகவும், பொதுமக்களின் இந்த இக்கட்டான சூழலை பயன்படுத்தி பொலிஸார் கையூட்டு பெறும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வருவதாகவும் வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் கடுமையாக சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல் படுத்தப்பட்டு வரும் அதிகளவான வீட்டுத்திட்டங்களினால் பொதுமக்களின் மணல் தேவை பெருந்தொகையாக அதிகரித்து காணப்படுகின்றது. ஆனால் தேவையை பூர்த்தி செய்வதற்கு அரச கட்டளைப்படி சொற்ப அளவு மணல் அனுமதியே வழங்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களின் மணல் தேவையை பூர்த்தி செய்வதற்கு இந்த அனுமதிகள் போதாது என்பதால், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு விசேட அனுமதியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று உதவி அரசாங்க அதிபர்களால் அனுமதி கோரப்பட்டுள்ள போதும், இலங்கையின் சகல மாவட்டங்களிலும் ஒரே அளவு மணல் கொள்வனவு அனுமதிப்பத்திரமே வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களை விடவும் வன்னி மாவட்டங்களுக்கு மணல் தேவை அதிகரித்து காணப்படுகின்ற போதும் விசேட அனுமதியை வழங்க சிறீலங்கா பேரினவாத அரசு மறுத்துள்ளது.

ஆற்றிலிருந்து மணலை கொண்டு வருவதற்கு மணல் யாட்டுகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள யாட்டுகளில் மணல் இல்லாத நிலைமையை காணப்படுகின்றது. இருந்த போதிலும் மக்களின் தேவை மற்றும் அசாதாரண சூழல்களை மனிதாபிமானத்தோடு அணுகி, பொதுமக்கள் தமது வீட்டுத்தேவைக்கு மணலை பெற்றுக் கொள்ளும் நடைமுறையில் உதவி அரச அதிபர்கள் இலகுதன்மைகளை கடைபிடிப்பதை நான் நன்கு அறிவேன்.

எமது மக்களின் பொருளாதார நிலைமைகளையும், வறுமையையும், யுத்தத்துக்குப்பின்னரான அவல வாழ்வையும் விளங்கிக்கொண்டு மனித மாண்புடனும், புரிந்துணர்வுடனும் சேவை வழங்கும் இத்தகைய உதவி அரசாங்க அதிபர்களை மனம் நிறைந்து பாராட்டுவதோடு, இவர்களின் சேவை எமது மக்களுக்கு இன்னும் தேவை என்பதையும் பெருமையுடன் கூறுகின்றேன்.

ஆனால் பொலிஸாரோ, உதவி அரச அதிபர்கள் மனிதாபிமானத்துடன் இலகுதன்மைகளை கடைப்பிடிக்கும் அணுகுமுறைகளுக்குள் ஊடுருவி, பொதுமக்களின் மணல் தேவையை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளில் பெரும் தடைக்கல்லாகவும், பாரிய அச்சுறுத்தலாகவும் இருந்து கையூட்டுகளை பெறும் நடவடிக்கைகளில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். குறுநில மன்னர்கள் போல செயல்படும் பொலிஸாரின் கையூட்டல் பெறும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்காத, மசியாத பொதுமக்கள் மீது பொலிஸார் வலிந்து பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி, நீதிமன்றங்களுக்கு பலவந்தமாக இழுத்துச்சென்று விடுகின்றனர்.

காடு கரம்பைகளில் ஆங்காங்கே நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர், பொதுமக்களின் உழவு இயந்திரங்களை கண்டதும் தொலைபேசிகளில் தகவல் கொடுத்ததும் அவ்விடத்துக்கு விரைந்து வரும் பொலிஸார், ஆற்றுப்பக்கமே போகாத உழவு இயந்திர பெட்டிகளுக்குள் மணல் அள்ள பயன்படுத்தும் சவல், மண்வெட்டி, கூடைகளை தாமே போட்டுவிட்டு, அந்த உழவு இயந்திரத்தில் பயணித்தவர்கள் மணல் அள்ள சென்றதாக கதை புனைந்து, நடைபெறாத ஒரு சம்பவத்தை நடைபெற்ற ஒரு காட்சியாக சித்திரித்து, தாம் கோரும் கையூட்டுத் தொகையை தருமாறும், இல்லாவிட்டால் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வோம் என்றும் மிரட்டி, பொலிஸார் கையூட்டு பெறும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகின்றன.

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து பின்னும் தமது கையூட்டு வலையில் எமது மக்களை திட்டமிட்டே சிக்க வைத்து, எமது மக்கள் தமது நாளாந்த வயிற்றுப்பிழைப்புக்காக உதிரத்தை கொட்டி உழைத்த பணத்தின் பலாபலன்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் அநுபவிப்பதையும், தம்மை யாரும் பணப்பிணை எடுக்க மாட்டார்கள் மற்றும் உழவு இயந்திரத்தை தடுத்து வைத்து விடுவார்கள் என்ற பயத்தினால் செய்யாத ஒரு குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொண்டு, எமது மக்கள் நீதிமன்றங்களுக்கு அதிகளவு தண்டப்பணம் செலுத்தி வரும் அபாய சூழலையும், இந்த விடையத்துடன் தொடர்புபட்ட தரப்புகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெரும்பாடுபட்டு உழைத்து சிறுகச்சிறுக சம்பாதித்த பணத்தை, பொலிஸாருக்கும் நீதிமன்றங்களுக்கும் செலுத்தி, எமது மக்கள் வீட்டையும் தம்மையும் கட்டியெழுப்ப முடியாமல் நித்தமும் சீரழிந்து கொண்டிருக்கின்றனர்.

ஆறு மாத காலத்துக்குள் வீட்டை கட்டி முடிக்க வேண்டும் என்று திட்டத்துடன் தொடர்புடைய நிர்வாக அலகுகளால் கொடுக்கப்படும் கடும் அழுத்தம் ஒரு பக்கம். குறுகிய கால எல்லை நிர்ப்பந்திப்பு மறுபக்கம். பொலிஸாருக்கும் கையூட்டு, அவர்களுக்கு பணிய மறுத்தால் சோடிக்கப்பட்ட ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றங்களுக்கு தண்டப்பணம் செலுத்தும் சூழல் இன்னுமொரு பக்கம் என்று பல்வேறு அசாதாரண சூழல்களுக்குள் நெரிப்பட்டு, எமது மக்கள் பெரும் அவஸ்தை பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவமாதாவின் வணக்கமாத சிந்தனை தேவையில் உள்ளோரின் அருட்கரம்



கத்தோலிக்க திருச சபையின் விசுவாச வாழ்வில் தனி இடம் வகிப்பவள் புனித கன்னி மரியாள். மீட்பு வரலாற்றிலே மீட்பரோடு சேர்ந்து பயணித்த அன்னை, தன் வாழ்நாள் முழுவதும் மனிதத் தையும் புனித த்தையும் அனுபவித்து ஒருசுமை தாங்கி யாகவே வாழ்ந் தவள்.

தன் இதய அரங்கை இறைவனுக்கு மட்டும் அர்ப் பணம் செய்து. இறைவனின் விருப் பப்படி வாழ்ந்து அவர் சித்தத்திற்கு கீழ் படிவதே தனது அழைப்பு என்று ஆழமாக அறிந்து கொண்டவர். அழை த்தல் வாழ்வு என்பது இறைப்பற்றுதலோடு மறைப் பற்றுதலும், இறையன்போடு பிறரன்பும், . ஆழ்ந்த விசுவாசத்தோடு அரிய பெரிய குணங்களையும், ஆன்மீக வளாச்சியோடு, ஆளுமை வளர்ச்சியையும், தியாக உணர்ச்சியோடு செயல் திறனையும் கொண்டமைந்த வாழ்வு என்பதனை தனது வாழ்வால் மனுக்குலத்துக்கு எடுத்துக்காட்டியவர் எமது அன்னை மரியாள். இறைவனுடனான உடனிருப்பு, தியாக அன்பு, சுய கையளிப்பு ஆகிய அழைத்தல் வாழ்வுக்குரிய பண்புகளை வாழ்ந்தது மட்டுமல்ல அவ்வாழ்விற்கு அனைவரையும் அழைத்துச் செல்பவரும் எமது அன்னையே.

துன்பத்தில் இருக்கும் மனிதருக்கு துயர் துடைத்து, விரக்தியில் வாழ்வோருக்கு ஆறுதல் அளித்து, பிறர் கண்ணீர் துடைத்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதன் மூலம்தான் இறைவிருப்பத்தை எம்மில் நிறைவேற்ற முடியும் என்ற தெளிவான எண்ணமும், செயல் வீரமும் அன்னையிடம் நிறையவே காணப்பட்டன. அதுதான் அவரை மனிதருக்கும் இறைவனுக்கும் இடையே ஒரு உறவுப் பாலமாக நிறுத்தியது. அன்னை மரியாளின் அருட்கரம் உறவை வளர்ப்பதாக அமைந்தது. அந்த உறவின் மூலம் மனிதம் மலர்ச்சியும், எழுச்சியும், வளர்ச்சியும் அடையும் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டு, மலரும் உறவுதான் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், ஏற்றத்திற்கும், மாற்றத்திற்கும், அன்பிற்கும், அமைதிக்கும் வழிகோலும் என்பதை தனது இவ்வுலக வாழ்வில் மட்டுமல்ல தொடர்ந்தும் எமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பவள் எமது அன்னை. இயேசுவின் தாயாகும் பாக்கியத்தை கடவுளிடம் இருந்து பெற்றுக் கொண்டாலும், பிறருக்கு உதவி செய்து வாழ்வதையே தன் வாழ்க்கையின் இலக்காக்கி வாழ்ந்தவள் புனித கன்னிமரியாள்.

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வெழுச்சி திட்டத்தின் கீழ் நடமாடும் சேவை

(மட்டக்களப்பு நிருபர்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வெழுச்சி திட்டத்தின் கீழ் “கிராமம் கிராமமாக” வீடுவீடாக நட மாடும் சேவையின் கீழ் மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத் தின் ஏற்பாட்டில் நடமாடும்சேவைகள் நடத் தப்பட்டுவருகின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்ச ரின் ஆலோசனையின் பேரில் கிராம மட்டத்தில் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் அவர்களின் காலடிக்கு சென்று இந்த நடமாடும்சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் கீழ் மீள்குடியேற்ற பிரதிய மைச்சரும் களுவாஞ்சிகுடி பிரதேச அபிவிருத்திக்குழு தலைவ ருமான விநாயகமூர்த்தி முரளிதரனின் வழிகாட்டலின் கீழ் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் முதலாவது நடமாடும் சேவை இன்று செவ்வாய்க் கிழமை குருக்கள்மடம் மகா வித்தியா லயத்தில் நடைபெற்றது.

களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் கலாநிதி ஆ.கோபாலரட்னம் தலைமை யில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவை யில் திணைக்களங்களின் தலைவர்கள் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் செயலாளர் திருமதி வசந்தராசா திணைக்கள பணிப்பாளர்கள் கிராம சேவையாளர்கள் திவிநெகும உத்தியோகத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோ கத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது வறுமையானவர்களின் வாழ்வா தாரத் தினை மேம்படுத்தும் வகையில் வாழ்வின் எழுச்சி சமூதாய அபிவிருத் தி அடிப்படைவங்கியின் ஊடாக எட்டு இலட்சம் ரூபா கடன்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் காணி உறுதிகள் அற்ற 26 குடும்பங்களுக்கு ரண்விம காணி உறுதிகளும் பிரதேச செயலாளரி னால் வழங்கிவைக்கப்பட்டன. இதன் . போது நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வருகைதந்து நடமாடும் சேவைகளை பெற்றுகொண்டதாக பிரதேச செயலாளர் கோபாலரட்னம் தெரிவித்தார்.

## இன்று

**சித்திரை - 25 வியாழக்கிழமை 08.05.2014**

திதி: சித்தம் பி.ப 3.53
நட்சத்திரம்:பூரம் மு.ப 10.38

சுப நேரம்:5.54 - 7.24 வரை
இராகு காலம்:10.24 - 11.54 வரை
எமகண்டம்: 2.54 - 4.24வரை



## இன்றைய பலன்

09.05.2014

### வழங்கியவர் மணிகண்டன்




இன்று, மனதில் அதிக நற்சிந்தனை உருவாகும். பிறருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில்,வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.




இன்று, பிறரது பேச்சால் மனவருத்தம் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் சில சீர்திருத்தம் அவசியமாகும். உணவுப்பொருள் தரம் அறிந்து உண்ணவும். இயந்திர தொழிற்சாலை பணியாளர்கள், பாதுகாப்பு நடைமுறை கவனமுடன் பின்பற்ற வேண்டும்.




இன்று, மனதில் இறை பக்தியின் மீதான நம்பிக்கை கூடும். உயர்ந்த எண்ணங்களை செயல்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடர் விலகி, வளர்ச்சி உண்டாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உறவினர் சில பொறுப்புக்களை தந்து, நிறைவேற்றக் கோருவர்.




இன்று, சிலர் உங்களிடம் நட்பு பாராட்டுவதாக தெரிவிக்க, தேவையற்ற வி'யங்களை வலிய வந்து பேசுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, கூடுதல் உழைப்பு உதவும். பிறர் பார்வையில் படும்படி, அதிக பணம் செலவு செய்ய வேண்டாம். குடும்ப உறுப்பினர்களிடம், ஒற்றுமை அவசியம்.




: இன்று, நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எவரிடமும் தர்க்கவாதம் பேசக் கூடாது. தொழிலில் அனுகூல நன்மைகளை பாதுகாப்பது நல்லது. அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். ஓய்வு நேரத்தில் இசைப்பாடலை ரசிப்பதால், மனதில் புத்துணர்வு பிறக்கும்.




இன்று, நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எவரிடமும் தர்க்கவாதம் பேசக் கூடாது. தொழிலில் அனுகூல நன்மைகளை பாதுகாப்பது நல்லது. அதிக பயன் தராத பொருள்-வாங்க வேண்டாம். ஓய்வு நேரத்தில் இசைப்பாடலை ரசிப்பதால், மனதில் புத்துணர்வு பிறக்கும்.




இன்று, கடினமான செயல்களையும் உங்கள் திறமையால் எளிதாக நிறைவேற்றுவீர்கள். சக பணியாளர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு, திட்டமிட்டபடி நிறைவேறும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெற, சத்து நிறைந்த உணவுகளை உண்பீர்கள்.




இன்று, உழைப்பின் மீதான நம்பிக்கை வளரும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில்,வியுாபாரம் வளர்ச்சி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை செழித்து லாப விகிதம் அதிகரிக்கும். கூடுதல் சொத்து சேர்க்கை பெற அனுகூலம் உண்டு.




இன்று, உங்கள் நண்பர், உறவினர்களின் பேச்சு சங்கடம் தருவதாக இருக்கும். இருப்பினும், பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில்,வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை இலக்கை நிறைவேற்ற கூடுதல் உழைப்பு அவசியமாகும். பணவரவில் சிக்கன செலவுகளை மேற்கொள்வீர்கள். போக்குவரத்தில் கவன நடை நல்லது.




இன்று, உங்கள் மனதில் இருந்த தயக்கம் விலகி, தைரியம் வளரும். பணிகளில் கூடுதல் ஆர்வம் கொள்வீர்கள். தொழில்,வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். அதிர்'டகரமாக உபரி பண வருமானம் கிடைக்கும். குடும்பத்தின் தேவைகளை, தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள்.




இன்று, உங்களின் எதார்த்த பேச்சு, பிறர் மனதை புண்படுத்தலாம். தன் குறையை உணர்ந்து அவர்கள் சமாதானப்படுத்துவீர்கள். தொழில்,வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில், தாமதம் இருக்கும். நண்பர், உறவினரின் அதிக




இன்று, மனதில் புதிய ஞானம் பிறக்கும். சவால்களை வென்று சாதனை புரிவீர்கள். தொழில் வளர்ச்சி அபரிமிதமான இருக்கும். கூடுதல் பணவரவில், நிலுவை பணக்கடன் அடைப்பீர்கள். பெற்றோர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

## சிந்திக்க சில வரிகள்

**மற்றவர்களால் ஏமாற்றப்படுவதைவிட
நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது
தான் மிகவும் பரிதாபத்திற்குரியது.**

- பாப் ஹோப் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண புதிய ஆளுநராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க நியமனம்?

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக தற்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபரான அனுர சேனநாயக்க நியமிக்கப்படுவார் என அரச உயர் வட்டாரங்களில் இருந்து நம்பகரமான தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைய ஆளுநர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் பதவிக்காலம் அடுத்த மாதம் 31ம் திகதியுடன் முடிவடைகின்றது. அந்தச் சமயத்தில் தற்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்று விடுவார் என்றும், அதையடுத்து அவர் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படுவார் என்றும் கூறப்பட்டது.

அரச தலைமைப்பீடத்துக்கு மிக நம்பிக்கையானவரான அனுர சேனநாயக்கா, அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படக்கூடும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. அண்மையில் அவரது பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிக்காலம் முடிவுற்ற சமயம் அது மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுமிருந்தது.

அவரை அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் நோக்குடனேயே அந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டதாகவும் கருதப்பட்டது. எனினும், அரசுத் தலைமை தற்போதைய பொலிஸ்மா அதிபரே அப்பதவியில் தொடரட்டும் என்றும், அனுர சேனநாயக்காவை வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கலாம் என்றும் இப்போது முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

வடக்கு மாகாணத்துக்குப் புதிய ஆளுநரை நியமிப்பதில் பல தரப்பிலிருந்தும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இதன் மூலம் தீர்க்கலாம் என்றும் அரசுத் தலைமை கருதுவதாகவும் தெரிகின்றது. முன்னாள் படை அதிகாரி ஒருவரை இந்தப் பதவிக்கு நியமிப்பதை வடக்குத் தமிழர்களும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் மற்றும் சர்வதேச தரப்புகளும் அடியோடு விரும்பவில்லை என்பது அரசுத் தலைமைக்குப் பல தரப்பினராலும் உணர்த்தப்பட்டுள்ளது.

ஆனால் பல்லாயிரம் படையினர் நிலை கொண்டுள்ள வடக்கு மாகாணத்தின் ஆளுநர் பொறுப்பை படைத் தரப்புத் தகுதி இல்லாத ஒரு சிவிலியனிடம் ஒப்படைத்தால், படைத்தரப்பையும் அரவணைத்து அங்கு நிர்வாகத்தை முன்னெடுப்பது சிக்கலாக இருக்கும் என்று அரசுத் தலைமை கருதுகின்றதாம். இந்த இரண்டு பிரச்சினைகளையும் ஒரே சமயத்தில் சமாளிப்பதற்குப் பொருத்தமான ஆளாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க இருப்பார் என அரசுத் தலைமை நினைக்கிறது.

ஓய்வுபெற்ற மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரை இப்பதவிக்கு நியமிப்பதை, சிவில் நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்தும் விவகாரமாக அர்த்தப்படுத்த முடியாது என்றும் அரசுத் தலைமை எண்ணுகின்றதாம். இந்தக் காரணங்களினாலேயே அவரை ஆளுநராக நியமிக்க அரசுத் தலைமை தீர்மானித்ததாக விடய மறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## கொலைச் சந்தேகநபர் மேல்நீதிமன்றால் விடுதலை

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆனைக்கோட்டைப் பகுதியில் நபர் ஒருவரை மண் வெட்டியால் கொத்திக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபரை யாழ்.மேல் நீதிமன்ற நீதவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர் நேற்று விடுதலை செய்தார்.

ஆனைக்கோட்டை யினைச் சேர்ந்த சின்னராசா திருச்செல்வம் என்பவர், 2010 ஆம் ஆண்டு அதேயிடத்தி னைச் சேர்ந்த நேசரட்ணம் என்ற நபரினை மண் வெட்டியால் கொத்திக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் மானிப்பாய் பொலிஸாரி னால் கைதுசெய்யப்பட்டு, யாழ். நீதவான் நீதிமன்றத்தினால் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

தொடர்ந்து மேற்படி வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ்.மேல் நீதிமன்றிற்கு மாற்றப்பட்டு, யாழ். மேல் நீதி மன்றம் குறித்த நபரை பிணையில் விடுதலை செய்திருந்ததுடன், கொலை வழக்கு தொடர்ச்சியாக மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, திருச்செல்வத்தினை விடுதலை செய்து நீதவான் தீர்ப்பளித்தார்.

## கூட்டமைப்பினரை கைது செய்யுமாறு தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை

(கொழும்பு)
தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை கைது செய்யுமாறு தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் நினைவுகூரல் வைபவங்களை ஏற்பாடு செய்வது நாட்டின் சட்டத்தை கடுமையாக மீறும் செயல் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணி, விடுதலைப் புலிகளை நினைவுக்கூரும் வைபவம் ஒன்றை எதிர்வரும் 18 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ள இயக்கம் ஒன்றை நினைக்கூரும் வகையில் வைபவங்களை ஏற்பாடு செய்வது அந்த இயக்கத்திற்கு மீண்டும் உயிரூட்டும் நடவடிக்கையாகும்.

நாட்டின் சட்டத்தை கவனத்தில் கொள்ளாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வரும் இப்படியான நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், கூட்டமைப்பினரை கைது செய்யுமாறும் தேசிய சுதந்திர முன்னணி கேட்டுக் கொண்டுள்ளது.

## மூன்று புதிய நீதியரசர்கள் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம்

(கொழும்பு)
உயர்நீதிமன்ற நீதியரசர்களாக மூன்று பேர் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்கள் நேற்று புதன்கிழமை அலரி மாளிகையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் சிசிர ஆப்ரு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சரத் ஆப்ரு, ஜனாதிபதி சட்டத்தரணி பிரியந்த சமரகோன் ஆகியோர் இவ்வாறு புதிய உயர் நீதிமன்ற நீதியரசர்களாக பதவியேற்றுக் கொண்டுள்ளனர்.

## ஈமச்சாந்திகளுக்கு பின்னர் உயிர் பெற்ற குழந்தை

(குருநாகல்)
இறந்துபோனதாக கூறப்பட்ட குழந்தை 6 நாட்களின் பின்னர் உயிர் பிழைத்த சம்பவம் குருநாகலில் இடம்பெற்றுள்ளது.

குருநாகல் வைத்தியசாலையில் பிரசவத்துக்காக கடந்த 26 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட சாந்தினி ஜெயதிலக்க என்ற தாய், 26 வாரங்கள் என்ற நிலையில் ஏப்ரல் 30 ஆம் திகதியன்று குறைப்பிரசவம் மூலம் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தார்.

இதன்போது குழந்தை இறந்து விட்டதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் அறிவித்தனர். இதனையடுத்து தாயும் வைத்தியசாலையில் இருந்து வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மே 6 ஆம் திகதியன்று இறந்து போன தமது குழந்தைக்கான சாந்திகளையும் பெற்றோர் செய்து முடித்தனர்.

இதன் போதே வைத்தியாலையில் இருந்து குறித்த குழந்தை உயிர் பெற்று விட்டதாக தகவல் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் கருத்துரைத்துள்ள வைத்தியசாலையில் பணிப்பாளர் சாதாரணமாக 26 வாரங்களில் பிறக்கும் குழந்தைகள் பிழைப்பது அரிது.

இந்நிலையில் வைத்தியசாலையின் பணியாளர்களின் அதீத முயற்சியின் காரணமாகவே குழந்தை உயிர்பெற முடிந்தது என்று குறிப்பிட்டார்.

## நியூஸிலாந்து இலங்கையுடன் புதிய விமான போக்குவரத்து உடன்படிக்கை

(கொழும்பு)
நியூஸிலாந்து புதிதாக இலங்கை உட்பட 14 நாடுகளுடன் வான்வெளி உடன்படிக்கைகளை செய்து கொள்ளவுள்ளது. இலங்கையை தவிர பின்லாந்து சவூதி, எத்தியோப்பியா, ஷம்பியா போன்ற நாடுகளும் இதில் உள்ளடங்குகின்றன.

இதனையடுத்து நியூஸிலாந்தின் வர்த்தகத்துக்கு பாரிய வழி திறந்து விடப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் போக்குவரத்து அமைச்சர் ஜெரி பிரௌன்லி தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி எல் பீரிஸுடன் செய்துக்கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையின்படி நியூஸிலாந்தின் நேரடி விமானங்கள் இலங்கைக்கு சேவைகளை மேற்கொள்ளும் என்று பிரௌன்லி குறிப்பிட்டுள்ளார்.

## பொதுத் தேர்தலா ஜனாதிபதித் தேர்தலா என்பது இன்று தீர்மானம் - சிங்கள ஊடகம்



(கொழும்பு)
பொதுத் தேர்தலை முதலில் நடாத்துவதா அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதா என்பதனை இன்று ஆளும் கட்சி தீர்மானிக்கும் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களை ஜனாதிபதி சந்திக்க உள்ளார். இன்று வெள்ளக்கிழமை இரவு 7.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால திட்டங்கள் குறித்தும் பேசப்பட உள்ளது. எதிர்காலத்தில் நடத்தப்பட உள்ள தேர்தல் குறித்தும் கவனம் செலுத்தப்பட உள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலில் ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதா அல்லது பொதுத் தேர்தலை நடாத்துவதா என்பது குறித்தும் எப்போது நடாத்துவது என்பது குறித்தும் ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## புலிகளுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியை முறியடிக்க வேண்டும்

### அமைச்சர் ஜோன் செனவிரட்ன



(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மீள உயிரூட்டும் முயற்சி முறியடிக்கப்பட வேண்டுமென பொதுநிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை சர்வதேசத்தின் ஒத்தழைப்புடன் இல்லாதொழிக்க முடியும். சுதந்திரத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாது புலி ஆதரவாளர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றன.

புலிகளை வென்றெடுக்க முடியாது என்பதே சர்வதேசத்தின் நிலைப்பாடாக அமைந்தது. எனினும் ஒரு சில ஆண்டுகளில் நாடு பாரிய அபிவிருத்தியை எட்டியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். இரத்தினபுரி, குருவிட்ட பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரைக் கண்டு அச்சமடைகிறது அரசு

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு சிறந்த கல்வியாளர்களின் பங்களிப்பும் சிறந்த நிந்தனையாளர்களின் பங்களிப்பும் மிகமிக அவசியமான ஒன்று. அப்படிப்பட்ட கல்வியாளர்களும் பகுத்தறிவாளர்களும் மண்ணில் பிறக்கும்போது சாதாரண பிறப்பாகத்தான் பிறக்கின்றார்கள். அவர்களை கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் நல்ல அறிவாளிகளாகவும் புத்தியீவிகளாகவும் நல்ல மனிதர்களாகவும் மாற்றிக்கொண்டிருக்கின்றது.

பல்கலைக்கழகம் என்பது ஒரு பழத்தேட்டத்தை போல அறிவுப் பசி தேடிவரும் வேடந்தாங்கிப் பறவைகளின் பசியினை போக்கி, ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ பறவைகள் வந்தாலும் அத்தனை பறவைகளும் அங்கே தமக்குத் தேவையான கல்விக்கனிகளை உண்டு, மகிழ்ந்து பறந்து சொல்கின்றன. ஆனால் பல லட்சம் பறவைகள் வந்தாலும் பல்கலைக்கழகங்கள் மட்டும் ஒரே இடத்தில் இருந்து தனது பணியினை செய்து கொண்டிருக்கும்.

ஒரு கல்விக்கூடம் மூடப்பட்டால் அது நூறு சிறைச்சாலைகள் திறக்கப்படுவதற்கு சமன் என்று உலகில் பல அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனால் சிங்கள தேசமோ எத்தனை சிறைச்சாலைகள் திறக்கப்பட்டாலும் பல்கலைக் கழகங்களை மூடுவதும் திறப்பதுமாக மாணவர்களின் கல்வியினை சீரழித்துக் கொண்டிருக்கின்றதே...!

இதன் நோக்கம் என்ன. ?
அரசியல். என்பது பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டாலும் அரசியலுக்கும் பாடசாலைகளுக்கும் சம்பமந்தம் ஏதும் இல்லை. ஆட்சி மாற்றம், அரசியல் போராட்டம் என்று எது நடந்தாலும் கல்விக்கூடங்களை மூடுவதாலோ அல்லது அழிப்பதினாலோ எந்த நன்மைகளும் கிட்டப் போவதில்லை. மாறாக தீமைகளே வந்தடையும்.

உலகத்தின் எத்தனையோ பலம்மிக்க இராணுவங்கள் வந்தாலும் எத்தனையோ அணுகுண்டுகள் போட்டாலும் மாணவ சக்திக்கு முன்னே அவை அத்தனையும் செயலிழந்து போகும். அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் தலைவிரித்து கொடும் தாண்டவம் போடும் இலங்கைத் தீவுக்குள்ளே! தமிழ் மாணவ மாணவிகள் வஞ்சிக்கப்படுவதை உலகம் இன்றுவரை கண்டுகொள்ளாது இருப்பது வேதனையான ஒன்றே.

போர் வெறியர்களாகவும் இனவெறியர்களாகவும். மாறிப்போன சிங்கள ஆட்சியாளர்களின் முட்டாள்தனமான செயற்பாடுகளால் தமிழ் மாணவர்கள் தண்டிக்கப்படுவதும் வஞ்சிக்கப் படுவதும் பல தசாப்தங்களாக நடைபெற்றுக் கொண்டிருப்பதினை கடந்த வரலாறுகள் சொல்லும். ஆனால் அதன் விளைவுகளை சிங்கள மேலாதிக்கமும் சிங்களப் பேரினவாதிகளும் எவ்வாறு எதிர்கொண்டார்கள் எப்படிப்பட்ட விளைவுகளை சந்தித்தார்கள் என்பதை மறந்திருக்க வாய்ப்பில்லை.

தமிழர்களின் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் அதை எழுச்சிமிகு போராட்டமாக மாற்றிய பெருமை மாணவ சமுதாயத்தையே சாரும். அன்று பல்கலைக் கழக தரப்படுத்துதல்களில் தமிழ் மாணவர்கள் ஓரம்கட்டப்பட்டதே இதற்கான காரணமாக அமைந்தது. அரச அலுவலகங்களிலும் உயர்ந்த பதவிகளிலும் சிங்கள மாணவர்களை அமர்த்திவிடவேண்டும் என்பதற்காக அன்றய ஆட்சியாளர்களினால் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டாலும் அதையும் தாண்டி சாதித்து காட்டியது தமிழ் மாணவ சமூகம்.
ஒருவிடயம் இங்கே முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். மாணவர்கள் என்றால் ஒரு நாட்டில் கல்விபயிலும் அனைவரும் உள்ளடக்கப் படுவார்கள். சாதியாலோ மதத்தினாலோ இனத்தினாலோ வேறுபடுத்தாது, அனைவருமே மாணவர்கள் என்ற நேக்கப்படுவார்கள். ஆனால் இலங்கையில் மட்டும் சிங்கள ஆட்சியாளர்களினால் மாணவர்கள் மதத்தினாலும் இனத்தினாலும் தரம்பிரிக்கப்பட்டு ஒருதலைப் பட்சமாக நடாத்தப்பட்டார்கள் இது வரலாறு அன்றுமுதல் இன்று வரைக்கும் வரைந்து கொண்டே வருகின்றது.

மாணவ சமூகமே! விழித்தெழு
ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே இனம் நாமெல்லாம் இலங்கையர்கள் என்று இலங்கையில் இருந்து இங்கிலாந்து வரைக்கும் கேட்கும்படி கூச்சலிடும் மகிந்த அரசு ஆட்சிபீடம் ஏறியநாள் தொடக்கம் இன்று வரைக்கும் என்றாவது தமிழர்களை இலங்கையின் குடிமக்களாக நினைத்தது உண்டா? இல்லை.

இதற்கு ஒரே ஒரு உதாரணமே போதும் 2007ஆம் ஆண்டு ஈழத்தமிழர்கள்மீது சிங்கள பேரினவாதத்தின் இறுதிப்போர் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்திலே, கொழும்பில் தங்கி இருந்த வடக்கு, கிழக்கு, மலையகம் என்று அத்தனை தமிழர்களும் இரவோடு இரவாக பஸ்வண்டிகளின் ஏற்றப்பட்டு பூசாவிலும் வெலிக்கடையிலும் அடைத்து வைக்கபட்டும், அங்கே இடம் இல்லாத காரணத்தினால் எஞ்சிய தமிழர்களை அரசசெலவில் பஸ்களில் ஏற்றி உடுத்த உடுப்புடனே வவுனியாவிற்கும் மன்னாருக்கும் கொண்டு சென்று தவிக்க விட்டார்களே.

காரணம் என்ன நீ தமிழன் சிங்களநாட்டிலே உனக்கு இடம் இல்லை என்று தானே! எத்தனை மாணவர்கள் அன்று சிறையிலே அடைக்கப்படார்கள் எத்தனை ஆசிரியர்கள் சிறையிலே அடைக்கப்பட்டார்கள் இதுதான் ஜனநாயகமா? எந்த ஒரு நாட்டின் பிரஜையும் தன் நாட்டில் எந்த பகுதிக்கும் சுதந்திரமாக கடவுச்சீட்டுகள் ஏதும் இன்றி செல்லமுடியும் வங்கிக்கணக்குகள் உட்பட எப்படிபட்ட ஒரு தேவையுனையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

ஆனால் 2007ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை சேர்ந்த எவருக்குமே கொழும்பில் எந்த ஒரு வங்கிகளும் வங்கிக்கணக்குகளை ஆரம்பித்துக் கொடுக்கவில்லை தொலைபேசிக்கான சிம் அட்டைகளை எந்த ஒரு தொலைபேசி நிறுவனகளும் தமிழ் அடையாள அட்டைகளுக்கு கொடுக்கவில்லை.

கல்விக்காகவும் வெளிநாட்டு தேவைகளுக் காகவும் தலைநகரிலே ஓரத்தில் வாழும் நாய்களாக ஒடுங்கி வாழ்ந்தோமே இதுதான் தாய்நாடா? இதுதான் சமத்துவமா? சிங்கள மொழிபேசும் மாணவர்களுக்கு எத்தனை சலுகைகள், மாலைகள் மரியாதைகள், தமிழன் பிள்ளைகள் என்ற காரணத்தினால் தகுதிகள் இருந்தும் தரம் குறைந்தவர்களாக்கப்பட்டு ஓரம்கட்டப்பட்டார்கள்.

தமிழ் மாணவர்கள் விடுதலைகேட்ட காரணத்தினால் மருத்துவ பீட மாணவன் திலீபன் பயங்கரவாதப் பட்டியலில் இன்னமும் இருக்கின்றான். சமத்துவம் கேட்ட காரணத்தினால் தங்கத்துரை 1983ஆம் ஆண்டு சிங்கள தேசத்தின் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான்.

இதையெல்லாம் மறந்துபோகுமா வரலாறு. மாணவ சமுதாயமே போர் முடிந்து இன்று ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டது. எம் இனத்துக்கு இந்த உலகுடன் கைகோர்த்து சிங்களப் பேரினவாதம் கொலைவாள் வீசி நச்சுக்குண்டுகள் போட்டு விமானங்களால் தாக்கி பட்டினிப்போரினை ஏவிவிட்டு மனிதகுலமே வெட்கப்படும் அளவு ஒரு கோரத்தாண்டவம் ஆடி ஐந்து ஆண்டுகள் நெருங்கிவிட்டது.

ஆனால் இன்னமும் இந்தப்பேரினவாதிகளின் ரத்த தாகம் அடங்கவில்லை மரணித்த மனிதனுக்காக அழக்கூடாது என்று உலகத்தில் எந்த நாடும் தடைகள் சொல்வதில்லை தியாகங்கள் செய்தவரை நினைவுகூர்ந்து வணக்கம் செலுத்தக்கூடாது என்று எந்த ஒரு சட்டமும் இதுவரை வரையப்படவில்லை. ஆனால் சிங்களதேசத்தில் மட்டும் ஏன் எமக்கு மட்டும் இந்தக்கொடுமைகள்.

ஒவ்வொரு மே18 தமிழின அழிப்புநாள் நெருங்கும்போதும் கார்த்திகை மாதம் மாவீரர்நாள் நெருங்கும்போதும் பல்கலைக் கழகங்களை மூடிவிடுமாறு உத்தரவிடுகின்றது.

இன்றைய ஆட்சிபீடம் ஒட்டுமொத்த மாணவ சமுதாயமும் நெஞ்சினை நிமிர்த்தி எழுந்து ஏன் என்று கேட்க்கூடாதா? பல்கலைக்களகங்களை மூடிவிட்டால் எங்கள் கல்வி பாதிக்கப்படுமே என்று எதிர்வுகூறக்கூடாதா?

உலகத்தில் மாணவ சக்திக்குமுன்ன எந்த சக்திகளுமே செயலற்றுப் போகாதா? மே 18 உனது நாட்டிலே வெற்றிக் கொண்டாட்டங்கள் போடுவதற்கு ஏன் எனது நாட்டு பல்கலைக்கழகங்களை மூடுகின்றாய் என்று வீதிக்கு வரக்கூடாதா?

நீ வீதியில் இறங்கினால் கண்டங்களைத் தாண்டிச் செல்லும் உனது போராட்டம் எனது அண்ணா தம்பிகளுக்காக நான் அழுது துடிப்பதை ஏன் நீ தடுக்கின்றாய். ஒரேநாடு ஒரே நாடு என்று ஊளையிடும் நரியே, புலிகளாக எங்களை மாற்றவா பார்க்கின்றாய் என்று எச்சரிக்கை செய், ஆயுதங்கள் இனி எதற்கு எழுதுகோல் துக்கு, உலகத்தில் சிறந்தவீரர்களே இந்த வீனர்கள் தடைகளை தகர்த்து எழுங்கள் தமிழன் வீட்டுப்பிள்ளைகளே தடைகள் கண்டு அச்சம் எதற்கு.

எவனோ ஒரு சுப்பனும் கந்தனும் எழுந்தால் புலிகள் என்று பூட்டிவைத்து கொலை செய்யும் பேரினவாதம் ஒட்டுமொத்த மாணவசமூகமும் எழுந்து நின்றால் என்ன செய்யும் சிங்கள தேசத்தின் சட்டப் புத்தகத்தின் குற்றங்களாக கூறப்படும் எதையுமே நீ செய்யவில்லை. நீ நாடு கேட்கவில்லை, நீ பிரிவினைவாதம் பேச வில்லை, நீ சகோதர யுத்தம் செய்யவில்லை. ஆனால் உனது உறவுகளுக்கு தீபமேற்றி கண்ணீர் விட்டு கதறியழுது விட்டக்கூடாதென்று பல்கலைக்கழகத்தையே மூடிவிடும் முட்டாள்களை கேள் எங்கள் கல்வி எதிர்காலம் பாதிக்கப் படாதா ஆயுததாரிகளுக்கும் பல்கலைக்கழகத்துக்கும் என்ன சம்பந்தம்.

நீ புத்தகத்திலே படித்தது மறந்து போனதா? நாட்டின் தூண்களாக நிமிரப்போகும் உங்கள் முள்ளந்தண்டுகளை நீங்கள் இழக்கலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரமற்ற ஒருதொகை கேக் காத்தான்குடியில் பறிமுதல்

(மட்டக்களப்பு)
மனித பாவணைக்கு உதவாத முறையில் பொதி செய்யப்பட்ட ஒரு. தொகை கேக் வகைகளை காத்தான்குடி பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் (06) பறிமுதல் செய்துள்ளனர். 170 கிலோ நிறை கொண்ட இவை, மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தின் வியாங்கொடை பிரதேசத்திலுள்ள நிறுவனம் ஒன்றில் தயாரிக்கப் பட்டு, விற்பனைக்காக கடைகளுக்கு கொண்டு செல்வதற்கு, இந்த கேக் வகைகள் காத்தான் குடிக்கு கொண்டுவரபட்டுள்ளன.
இவற்றை கைப் பற்றிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதி செய்யப்பட்ட 170 கிலோ கேக்கையும், அதனை விற்பனை செய்யவந்த விற்பனை பிரதிநிதி யையும் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

## இலங்கையையும் மாலைதீவையும் இந்திய புலனாய்வு பிரிவு கண்காணிப்பு

(கொழும்பு)
தென்னிந்தியாவை தாக்குதல் மையமாகக் கொண்டு பாகிஸ்தானிய தீவிரவாதிகள் இலங்கையையும் மாலை தீவையும் பயன்படுத்துவதாக இந்திய புலனாய்வு பிரிவினர் சந்தேகிக்கின்றனர்.

இதனையடுத்து இந்த இரண்டு நாடுகளையும் கண்காணிக்கும் நடவடிக்கைகளை அவர்களை மேற்கொண்டுள்ளனர் என்று த டைமஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கை பிரஜையான சாகீர் ஹுசைன் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரத்துக்கு உளவு பார்க்கும் போது தமிழகத்தில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலை அடுத்தே இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் மீது தமது கண்காணிப்பை திருப்பியுள்ளது.

தாம், தென்னிந்தி யாவில் உள்ள அமெரிக்க மற்றும் மேற்கத்தைய நாடுகளின் அலுவலகங்களையும் இந்திய நிலைகளையும் உளவு பார்த்ததை ஏற்றுக்கொண் டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் உள்ள பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகரக ராஜதந்திரி ஒருவர், மாலைத்தீவில் இருந்து சென்னைக்கு இரண்டு பேரை அனுப்பிவைக்க உதவியதாகவும் இலங்கையர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் மாலைதீவு மற்றும் இலங்கை ஆகியன பாகிஸ்தானுடன் அதிக நட்பை கொண்ட நாடுகளாக உள்ளன. எனவே இந்த இரண்டு நாடுகளையும் பாகிஸ்தானிய தீவிரவாதிகள் மையப் பகுதியாக பயன்படுத்த முடியும் என்பதே இந்திய புலனாய்வினரின் கருத்தாக உள்ளது.

## கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை 10 பொலிஸ் குழுக்கள் நியமனம்

(குருநாகல்)
குருநாகலில் பொலிஸ் கான்ஸ்டபிள் கடத்தப் பட்டு சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரிக்க 10 பொலிஸ் குழுக் கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித் துள்ளார்.

கடந்த 6ம் திகதி அதிகாலை குருநாகல் சோதனைச் சாவடியில் காவல் கடமை யில் இருந்த இரண்டு பொலிஸார் கடத் தப்பட்டு காட்டுப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோ கத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றை யவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவரிடம் பொலிஸார் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், இந்தச் சம்பவம் குறித்து விசாரணை செயவதற்கு 10 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். அத்துடன் இச்சம் பவம் தொடர்பில் இதுவரை அப்பகுதி யில் உள்ள 20 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்றும் சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினரும் விசாரணை களை நடத்தி வருகின்றனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

எதிர்காலத்தில் ஆயுதங்களை எடுத்துச் செல்லாத பொலிஸ் உத்தியோகத் தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக் கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. கடமைக்கு செல்லும் சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஆய தங்களை எடுத்துச் செல்ல வேண்டியது கட்டாயப படுத்தப்பட்டுள்ளது. ஆயதங் களை எடுத்துச் செல்லத் தவறும் பொலிஸ் உத்தி யோகத்தர்களின் பணி யை இடைநிறுத்த முடியும் என பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோன் நேற்று தெரிவித்துள்ளார். நிறுவன ஒழுக் கக் கோவைக்கு அமைவான வகையில் ஆயுதத்தை எடுத்துச் செல்லாத பொலிஸ் உத்தியோகத்தர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பிரதேசத்திற்கு பொறுப்பான துணைப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகி யோரின் பணியை இடைநிறுத்த முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பற்ற நிலையில் பொலிஸ் உத் தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத் தப்படக் கூடாது என அவர் தெரிவித் துள்ளார். ஆயுதம் தொடர்பிலான வழி காட்டல்களை பின்பற்றத் தவறும் பொலி ஸ் உத்தியோகத்தர்கள், நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் பிரதேசத் திற்குப் பொறுப்பான துணை அத்தியட் சகர்களுக்கு எதிராக பிரதிப் பொலிஸ் மா அதிர்கள் தண்டனை விதிக்க முடியும் என அறிவித்துள்ளார். பாதுகாப்பற்ற முறையில் கடமையில் ஈடுபடுவதனால் அதிகளவில் பொலிஸ் உத்தியோ கத்தர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரி வித்துள்ளார். எனவே, ஆயுதங்கள் எடுத்துச் செல்வது குறித்த சட்டம் எதிர் காலத்தில் கடுமையாக பின்பற்றப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டில் மது பாவனையை தடை செய்ய முடியாது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு

### பௌத்த ஆலோசனை டிப்ளோமா பயிற்சி நெறி

(கொழும்பு)
நாட்டில் மது பாவனையை தடை செய்ய முடியாது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. பௌத்த சாசன பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன இதனை நேற்று நாடாளு மன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் மத்தட்ட தித்த என்ற கொள்கையின் மூலம் மாத்திரம் இலங் கையில் மதுபாவனையை கட்டுப்படுத்த முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

பௌத்த தர்மத்துக்கு ஏற்ப இலங்கை யில் மதுபாவனை தடை செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா முன்வைத்த கோரிக் கைக்கு, பதிலளிக்கையிலேயே பிரதிய மைச்சர் அதனை கட்டுப்படுத்த முடியாது என்று தெரிவித்தார்.

மதுபாவனையை தடை செய்ய முடி யாது எனினும் அதனை கட்டுப்படுத்த முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார். இதன் போது கருத்துரைத்த அஜித் பி பெரேரா, இலங்கையில் அண்மைக் காலமாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மது பாவனை அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதியமைச்சர் பொதுமக்கள் மேலும் மேலும் அதிகமாக மதுவை நுகர்வதால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பௌத்த ஆலோசனை டிப்ளோமா பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

பௌத்த பாலி பல்கலைக்கழகத்தின் ~~மஹோபாத்திய தெமாலியே இந்தராசார~~ தேரர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ச ஆகியோரின் எண்ணக்கருவிற்கு அமைய இந்த விசேட பயிற்சி நெறி முன்னெடுக்கப்பட உள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கு பௌத்த மத கொள்கைகளை கற்பிக்கும் நோக்கில் இந்த விசேட டிப் ளோமா பயிற்சி நெறி வடிவமைக்கப் பட்டுள்ளது. முதலாம் குழுவில் 54 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது.

எனினும், எப்போது இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது என்பது பற்றிய உத்தியோகபூர்வ திகதிகள் வெளியிடப்பவில்லை. பௌத்தா லோக்க மாவத்தையில் அமைந்துள்ள பௌத்த பாலி பல்கலைக்கழகத்தின் பிரதான காரியாலயத்தில், வார இறுதிகளில் இந்த பயிற்சி நெறி நடத்தப்பட உள்ளது.

30ஆண்டு கால போரின் பின்னர் பொலிஸார் மக்களுடன் நட்புறவுடன் நடந்து கொள்ளவும், செய்யப்படும் புகார்களை பௌத்த ஆலோசனைக்கு அமைய தீர்க்கவும் இந்த பயிற்சி நெறி வழியமைக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குடும்ப பிணக்கு, மோதல் சம்பவங்கள் போன்றன தொடர்பிலான புகார்களுக்கு நீதிமன்றம் செல்லாமலேயே தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி நெறி யில் பங்கேற்கும் பொலிஸ் உத்தி யோகத்தர்களுக்கு ஆங்கில மற்றும் தமிழ் மொழிகளும் கற்பிக் கப்பட உள்ளது.

## கொழும்பில் உயிரிழந்த குழந்தையின் உடலை வன்னிக்கு எடுத்து வர உதவிக்கரம் நீட்டிய பெண்கள்!

(கிளிநொச்சி)
புற்றுநோயால் கொழும்பில் உயிரிழந்த குழந்தையின் பூதவுடலை அங்கிருந்து வன்னிக்கு எடுத்துவர பெண் தொழிலா ளர்கள் உதவிக்கரம் நீட்டி முன்னுதார ணமாகியுள்ளனர். விடுதலைப் புலிகள் அமைப்பின் யாழ் மாவட்டத் தளபதி களுள் ஒருவராக இருந்தவர் மகேந்தி. அவருட்பட மூன்று பேர் குடும்பத்தி லிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருந்தனர். அவர்கள் எவரும் தற்போது உயிருடனில்லை. அனை வரும் மாவீரர்களே.

இந்நிலையில் அவர்களது சகோதரனான யோகேந்திரன் தனது குடும்பத்துடன் வன்னியில் வறுமையில் வாழ்ந்து வருகின்றார். இந்நிலையில் அவரது மகளான தமிழ்மதி புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு போதிய சிகிச்சையின்றி உயிரிழந்துள்ளார். கொழும்பு சென்று மருத்துவ சிகிச்சையினைப்பெற போதிய பணவசதியின்மையினாலேயே அக்குழந் தை பரிதாபகரமாக உயிரிழந்ததாக தெரி விக்கப்படுகின்றது. இந்நிலையில் அரச அம்புலன்ஸ் மூலம் கொழும்புக்கு சிகிச் சைக்கென கொண்டு செல்லப்பட்ட இக் குழந்தை தற்போது உயிரிழந்துள்ளது. எனினும் பூதவுடலை வன்னிக்கு எடுத்துவர பணமின்மையால் கடந்த சில நாட்களாக கொழும்பில் பிரேத அறையில் அச்சிறு குழந்தை யினது பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது.

சம்பவம் பற்றி அறிந்த கிளிநொச்சி யிலுள்ள தனியார் ஆடை தையற் தொழி ற்சாலை பெண்பணியாளர்கள் இணைந்து திரட்டி வழங்கிய பணத்தை அடுத்து பூதவுடல் சொந்த இடத்திற்கு நேற்று எடுத்துவரப்பட்டுள்ளது. குறித்த தொழிற் சாலையில் யுத்த அவலங்களை தாங்கிய பெண் தொழிலாளர்களே பணி யாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீதியைக் கடக்க முயன்ற முதியவர் மோட்டார் சைக்கிள் மோதி பலி

(கண்டி)
வென்னப்புவ லுணுவில போலவத்தை வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று வீதியை கடக்க முற்பட்ட 84 வயதான முதியவர் ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்த முதியவர் லுணுவில வைத்தியசாலையில் சிகிச் சை பெற்று வந்தபோது, பலியாகி யுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்துடன், சம்பவத்துடன் தொடர்பு டைய மோட்டார் சைக்கிள் சாரதி காய மடைந்த நிலையில் மாரவில வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சம்பவம் குறித்த மேலதிக விசார ணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத எதிர்ப்பு கருத்து கூறிய பாகிஸ்தான் வக்கீல் சுட்டுக்கொலை

(இஸ்லமாபாத்)
பாகிஸ்தானில் உள்ள முல்தான் என்ற இடத்தை சேர்ந்தவர் ரீத் ரகுமான். இவர் வக்கீலாக பணியாற்றி வந்தார். வக்கீல் பணியுடன் கல்லூரியில் சொற்பொழி வாற்றும் செயலிலும் ஈடுபட்டு வந்தார்.
அவர் மதத்துக்கு எதிராக அடிக்கடி கருத்துக்களை கூறி வந்ததாக கூறப்படுகிறது. இதனால் அவருக்கு ஏற்கனவே கொலை மிரட்டல்கள் இருந்து வந்தன.

இந்த நிலையில் அவர் தனது அலுவலகத்தில் உதவியாளர்களுடன் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு துப்பாக்கியுடன் வந்த 2 பேர் அவரை சரமாரியாக சுட்டனர். தடுக்க முயன்ற உதவியாளர்களையும் சுட்டார்கள்.

3 பேரும் படுகாயம் அடைந்தனர். அவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்து சென்றனர். அதில் ர°த்ரகுமான் உயிரிழந்தார்.

# ஒபாமாவின் மகள்களை கடத்த முயற்சி பின்தொடர்ந்து வந்தவர் கைது




(வாஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா-மிச்செல்லி தம்பதியருக்கு மாலியா (வயது 16), சஷா (13) என இரண்டு மகள்கள் இருக்கி றார்கள். அவர்கள் நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி மாலை 4.30 மணிக்கு காரில் வெளியே சென்று விட்டு வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களது காரைத்தொடர்ந்து பாதுகாப்பு வாகனங்கள் அணி வகுத்து வந்தன. அவற்றுடன் ஒபாமா மகள்களின் காருக்குப் பின்னால் மற்றொரு காரும் பின்தொடர்ந்து வந்தது. அந்தக்கார் வெள்ளை மாளிகைக்கு அருகே அமைந் துள்ள, பிற வாகன போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ள, உச்சக்கட்ட பாதுகாப்பு அம்சங்களைக் கொண்ட பென்சில்வேனியா அவென்யூவில் 17-வது சோதனைச்சாவடியையும் கடந்து வந்து விட்டது. இதைக்கண்டு அதிர்ச்சி அடைந் த பாதுகாப்பு அதிகாரிகள், ஒபாமாவின் மகள்களை பின்தொடர்ந்து வந்ததால், அவர்களை கடத்திச்செல்வதற்காக அந் தக்கார் வந்திருக்கலாம் என கருதினர். உடனே சந்தேகத்துக்கு இடமான அந்தக்காரை தடுத்து நிறுத்தினர்.

காருக்குள் வெடிகுண்டு அல்லது வெடிபொருட்கள் அல்லது ஆயுதங்கள் இருக்கின்றனவா என சோதனை போடப் பட்டது. இந்த சம்பவத்தின் போது, வெள்ளை மாளிகை மூடப்பட்டது. ஒருமணி நேர சோதனை நடவடிக்கைக்கு பின்னர் காரை ஓட்டி வந்த மேத்யூ ஈவன் கோல்டுஸ்டெயின் (55) என்ற அந்த ஆசாமி கைது செய்யப்பட்டார்.

அவர் மீது சட்ட விரோதமாக பென்சில் வேனியா அவென்யூவில் நுழைந்த குற்றச் சாட்டின் பேரில் வழக்குப்பதிவு செய்யப் பட்டது. அவர் விசாரணைக்காக நகர போலீஸ் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரிடம் விசாரணை நடத்தப்படுகிறது. ஏற்கனவே நைஜீரியா வில் 200-க்கும் மேற்பட்ட பள்ளிக்கூட மாணவிகளை அங்கு தனிநாடு கேட்டு போராடி வருகிற போகோ ஹரம் தீவிரவாதிகள் கடத்திச்சென்று ஒருமாதம் ஆகியும் அவர்கள் கதி என்ன என தெரியவில்லை.

# மீண்டும் இரட்டை குட்டிகள்: குஷியில் பெடரர்



(இங்கிலாந்து)
பிரபல டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர்க்கு கடந்த முறை இரட்டை பெண் குழந்தை பிறந்ததையடுத்து, இந்த முறை மீண்டும் இரட்டை ஆண் குழந்தை பிறந்துள்ளது.

டென்னிஸ் உலகின் சாதனை நாயகனாக வலம் வரும் ரோஜர் பெடரர் உலகதர வரிசையில் 4வது இடத்தில் உள்ளார். அது மட்டுமல்லாது 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனையாளராக விளங்குபவர். வெற்றி வீரரான 32 வயதான ரோஜர் பெடரர், சக அணிக்காக விளையாடிய, தன்னை விட 4 வயது மூத்த வீராங்கனையான மிர்காவை காதலித்து திருமணம் செய்து கொண்டார். பெடரர் மிர்கா தம்பதிக்கு ஏற்கனவே 4 வயதில் சார்லின் மைலா என்ற இரட்டை பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். இதற்கி டையே, மிர்கா மீண்டும் கர்ப்பமானார்.

அவர் நிறைமாத கர்ப்பிணியாக இருந்ததால், மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியில் இருந்து பெடரர் கடைசி நேரத்தில் விலகினார். இந்நிலையில் மிர்காவுக்கு நேற்று முன்தினம் இரட்டை ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இது பற்றி பெடரர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில், எங்களுக்கு லியா லென்னி என்ற இரட்டை ஆண் குழந்தை பிறந்துள்ளது. இந்த எல்லை யில்லா மகிழ்ச்சியை நானும், மிர்காவும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம் என்று பெடரர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளார்.

# இங்கிலாந்தில் வேலை இழக்கும் இந்திய வைத்தியர்கள்!

(இங்கிலாந்து)
இங்கிலாந்தில் பணிபுரியும் இந்திய வைத்தியர்கள் பலரும் வேலை இழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இங்கிலாந் தில் பணிபுரியும் வெளிநாட்டு வைத்தியர் கள் பலரைக் கடந்த ஆண்டுகளில் இங்கிலாந்து மருத்துவப் பேரவை பணி நீக்கம் செய்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் சராசரியாக 250 பேரில் ஒருவர் என்ற விகிதத்தில் இந்திய வைத்தியர்கள் வேலை இழந்துள்ளனர். இவற்றில் பெரும் பாலானோர் இந்தியாவில் மருத்துவம் படித்துவிட்டு இங்கிலாந்துக்கு பணிபுரிய சென்றவர்கள்.

கடந்த 2009ஆம் ஆண்டில் இருந்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வைத்தியர்கள் 117 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக் கும், இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற மருத்துவ பட்டதாரிகளுக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் தீவிரவாதிகள் கடத்திய மாணவிகளை விடுவிக்கும்படி மலாலா வேண்டுகோள்



(கனோ)
நைஜீரியா நாட்டில் உள்ள சிபோக் என்ற இடத்தில் விடுதியுடன் கூடிய பள்ளிக்கூடம் ஒன்று செயல்பட்டு வந்தது. இங்கு 500க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வந்தனர். இங்கு கடந்த மாதம் 14ந்தேதி தீவிரவாதிகள் திடீரென நுழைந்து 200க்கும் மேற்பட்ட மாணவிகளை கடத்தி சென்றனர். கடத்தப்பட்ட மாணவிகள் அனைவரும் 13 வயதில் இருந்து 17 வயதிற்கு உட்பட்டவர்கள்.

அவர்களை தீவிரவாதிகள் எங்கு வைத்திருக்கிறார்கள் என்று தெரிய வில்லை. அந்த மாணவிகளை தீவிரவாதிகளுக்கு செக்ஸ் அடிமை களாக விற்கப்போவதாக தீவிரவாதி கள் மிரட்டியுள்ளனர்.

நைஜீரியா படையினர் அந்த மாணவிகளை மீட்பதற்கு இதுவரை நடந்த முயற்சி பலனளிக்கவில்லை. எனவே வெளிநாட்டு உதவிகளை நைஜீரியா நாடியுள்ளது. இதையடுத்து அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகள் நிபுணர் குழுவினர களை நைஜீரியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் சுடப்பட்டு உயிர் பிழைத்த சிறுமி மலாலா நைஜீரியா வில் கடத்தப்பட்ட 200 மாணவிகளை யும் தீவிரவாதிகள் விடுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலாலா பெண் கல்விக்காக குரல் கொடுத்து வந்தார். இதனால் அவரை தீவிரவாதிகள் சுட்டனர். பலத்த காயம் அடைந்த அவர் தீவிர சிகிச்சைக்கு பின் உயிர் பிழைத்தார். தற்போது இங் கிலாந்து நாட்டில் அவர் தஞ்சமடைந் துள்ளார். அங்கிருந்தபடி இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறும்போது, கடத்தப் பட்ட மாணவிகள் அனைவரும் நமது சகோதரிகள். அவர்களுக்காக அனை வரும் குரல் கொடுக்க வேண்டும். இந்த பிரச்சினையை எங்கோ நடக்கும் பிரச்சினையாக கருதி கண்டு கொள் ளாமல் விட்டுவிடக் கூடாது. இதில் நாம் அமைதியாக இருந்தால் இது போன்ற மேலும் பல பிரச்சினைகள் நடக்க தொடங்கிவிடும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

# உகாண்டாவில் தேவாலயங்கள் தாக்கப்படும் அபாயம்

## அமெரிக்கா எச்சரிக்கை

(கம்பாலா)
சோமாலியா நாட்டில் இஸ்லாமிய சட்ட ங்களை செயல்படுத்துவிதமாக அல்-ஷபாப் என்ற தீவிரவாத இயக்கத்தினர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின் றனர். இவர்கள் தற்போது அல்கொய் தா இயக்கத்தினரின் தற்கொலைத் தாக்குதல் முறைகளை பின்பற்றத் தொடங்கியுள்ளனர்.

கென்யா, உகாண்டா, எதியோப்பியா, புருண்டி, ஜிபவுடி மற்றும் சியாரா லியோன் உட்பட பல நாடுகள் இந்த இயக்கத்தினரை கட்டுக்குள் கொண்டு வர சோமாலியாவிற்கு உதவும் பொருட்டு தங்களின் படை வீரர்களை அனுப்பியுள்ளன. இதன் விளைவாக பிற நாடுகளிலும் அல்-ஷபாப் இயக்கத் தினர் வன்முறைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 2010ஆம் ஆண்டு உகாண்டா வின் தலைநகர் கம்பாலாவில் உள்ள உணவகம் ஒன்றில் உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத் தினை பார்த்துக்கொண்டிருந்த 77 பேரை இந்தத் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் கொன்றனர். மீண்டும் கடந்த செப்டம்பர் மாதம் கென்யாவின் தலைநகர் நைரோபியில் உள்ள வர்த் தக வளாகத்தில் நடைபெற்ற வெடி குண்டுத் தாக்குதல் போராட்டத்தில் 67 பேர் பலியாகினர். இந்த ஆண்டு மார்ச் மாதம் உகாண்டாவில் பெட்ரோல் டாங்கர்கள், எரிபொருள் கிடங்குகளில் போராளிகளின் தாக்குதல்கள் இருக் கக்கூடும் என்ற ஒரு எச்சரிக்கையும் வெளியானது.

கென்யாவின் தலைநகர் நைரோபியும், துறைமுக நகரமான மொம்பாசாவும் சமீப கால வார இறுதியில் துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுத் தாக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றது. சோமாலி யாவின் அல்கொய்தா ஆதரவு பெற்ற அல்-ஷபாப் இயக்கத்தினரே இதற்குக் காரணம் என்று அந்நாட்டு அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

தற்போது இந்த மாதம் 6ஆம் தேதி அமெரிக்காவின் உளவுத்துறை வெளியிட்டுள்ள எச்சரிக்கைத் தகவல் ஒன்றில் உகாண்டாவின் தலைநகரில் உள்ள தேவாலயங்கள் தாக்கப்படும் அபாயங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பள்ளிச்சிறுமிகளை கடத்தியது தீவிரவாத செயல் - ஹிலாரி கிளிண்டன்

(வாஷிங்டன்)
நைஜீரியாவில் பள்ளியில் படிக்கும் சிறுமிகள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட 300பேர் போகோ ஹாரம் தீவிரவாதிக ளால் கடத்தப்பட்டனர். இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கா வின் முன்னாள் வெளியுறவுத்துறை செயலாளரான ஹிலாரி கிளிண்டன், நைஜீரிய அரசை உடனடியாக மீட்பு பணியை தொடங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.
மாணவிகளை தீவிரவாத அமைப்பு கடத்தியிருப்பது மிகப்பெரிய குற்றமா கும். இதுவும் தீவிரவாதத்தின் ஒரு வகை தான். இந்த செயலை தடுக்க வேண்டியது நைஜீரிய அரசின் கடமை யாகும். கடந்த ஏப்ரல் 15ந் தேதி கடத் தப்பட்ட அச்சிறுமிகளுக்கு ஆபத்து நேரும் முன்பாகவோ, யாருக்கேனும் அடிமையாக விற்கப்படுவதற்கு முன்பா கவோ காப்பாற்றப்பட வேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

இத்தீவிரவாத குழுவின் தலைவனான அபுபக்கர், மாணவிகளை விற்றுவிடு வேன் என்று கூறி மிரட்டியிருப்பது, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளது. கடத்தப்பட்ட மாணவிகளை மீட்கும் பொருட்டு அமெரிக்கா தன் பங்கிற்கு 10 வீரர்கள் கொண்ட படையை அனுப்பியுள்ளதாக ஹிலாரி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் - 03

# பொன்னியின் செல்வன்

(சென்ற வார தொடர்ச்சி)

அதையெல்லாம் நான் கேட்கவில்லை இன்று ராத்திரி எங்கே தங்குவாய் என்று கேட்டேன்.

நீ எதற்காக அதைக் கேட்கிறாய்?

ஒருவேளை கடம்பூர்ச் சம்புவரையர் அரண்மனையில் நீ தங்குவதாயிருந்தால், எனக்கு அங்கே ஒரு வேலை இருக்கிறது.

உனக்கு மந்திரதந்திரம் தெரியுமா, என்ன? நான் கடம்பூர் அரண்மனைக்குப் போகிறேன் என்பதை எப்படி அறிந்தாய்?

இதில் என்ன அதிசயம்? இன்றைக்குப் பல ஊர்களிலிருந்தும் பல விருந்தாளிகள் அங்கே வருகிறார்கள். பழுவேட்டரையரும் அவர் பரிவாரமும் அங்கேதான் போகிறார்கள்.

மெய்யாகவா? என்று வந்தியத்தேவன் தன் வியப்பை வெளியிட்டான்.

மெய்யாகத்தான்! அது உனக்குத் தெரியாதா, என்ன? யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம், எல்லாம் கடம்பூர் அரண்மனையைச் சேர்ந்தவை தான். பழுவேட்டரையரை எதிர்கொண்டு அழைத்துப் போகின்றன. பழுவேட்டரையர் எங்கே போனாலும் இந்த மரியாதையெல்லாம் அவருக்கு நடைபெற்றே ஆக வேண்டும்.

வந்தியத்தேவன் மௌன யோசனையில் ஆழ்ந்தான். பழுவேட்டரையர் தங்குமிடத்தில் தானும் தங்குவதென்பது எளிதில் கிடைக்கக் கூடிய வாய்ப்பு அல்ல. அந்த மாபெரும் வீரருடன் பழக்கம் செய்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால் அவருடைய முரட்டுப் பரிவாரங்களுடன் ஏற்பட்ட அனுபவம் இன்னும் அவனுக்குக் கசந்து கொண்டிருந்தது.

தம்பி! எனக்கு ஒரு உதவி செய்வாயா? என்று ஆழ்வார்க்கடியான் இரக்கமான குரலில் கேட்டான்.

உனக்கு நான் செய்யக்கூடிய உதவி என்ன இருக்க முடியும்? இந்தப் பக்கத்துக்கே நான் புதியவன்.

உன்னால் முடியக்கூடிய காரியத்தையே சொல்வேன். இன்றிரவு என்னைக் கடம்பூர் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போ!

எதற்காக? அங்கே யாராவது வீரசைவர் வருகிறாரா? சிவன் பெரிய தெய்வமா? திருமால் பெரிய தெய்வமா? என்று விவாதித்து முடிவு கட்டப் போகிறீர்களா?

இல்லை, இல்லை சண்டை பிடிப்பதே என் வேலை என்று நினைக்க வேண்டாம். இன்றிரவு கடம்பூர் மாளிகையில் பெரிய விருந்து நடைபெறும். விருந்துக்கு பிறகு களியாட்டம், சாமியாட்டம், குரவைக் கூத்து எல்லாம் நடைபெறும். குரவைக் கூத்துப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை!

அப்படியிருந்தாலும் நான் உன்னை எப்படி அழைத்துப் போக முடியும்? என்னை உன் பணியாள் என்று சொன்னால் போகிறது. வந்தியத்தேவனுக்கு முன்னால் ஏற்பட்ட சந்தேகம் வலுப்பட்டது.

அந்த மாதிரி ஏமாற்று மோசடிக்கெல்லாம் நீ வேறு யாரையாவது பார்க்க வேண்டும். உன்னைப் போன்ற பணியாளன் எனக்குத் தேவையில்லை, சொன்னால் நம்பவும் மாட்டார்கள். மேலும், நீ சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்த்தால் என்னையே இன்று கோட்டைக்குள் விடுவார்களோ என்ற சந்தேகம் உண்டாகிறது.

அப்படியானால், நீ கடம்பூருக்கு அழைப்புப் பெற்று போகவில்லையென்று சொல்லு!

ஒருவகையில் அழைப்பு இருக்கிறது, சம்புவரையர் மகன் கந்தமாறவேள் என்னுடைய உற்ற நண்பன். இந்தப் பக்கம் வந்தால் அவர்களுடைய அரண்மனைக்கு அவசியம் வரவேணுமென்று என்னைப் பலமுறை அழைத்திருக்கிறான்.

இவ்வளவுதானா? அப்படியானால் உன் பாடே இன்றைக்குக் கொஞ்சம் திண்டாட்டமாத்தான் இருக்கும்!

இருவரும் சிறிது நேரம் மௌனமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். ஏன் என்னை இன்னும் தொடர்ந்து வருகிறாய்? என்று வந்தியத்தேவன் கேட்டான்.

அந்தக் கேள்வியையே நானும் திருப்பிக் கேட்கலாம் நீ ஏன் என்னைத் தொடர்கிறாய்? உன் வழியே போவதுதானே?

வழி தெரியாத குற்றத்தினால் தான். நம்பி! நீ எங்கே போகிறாய்? ஒருவேலை கடம்பூருக்குத் தானா?

இல்லை நீதான் என்னை அங்கு அழைத்துப் போக முடியாது என்று சொல்லிவிட்டாயே? நான் விண்ணகரக் கோயிலுக்குப் போகிறேன்.

வீரநாராயணப் பெருமாள் சந்நிதிக்குத்தானே?

ஆம்.

நானும் அந்த ஆலயத்துக்கு வந்து பெருமாளைச் சேவிப்பதற்கு விரும்புகிறேன்.

ஒருவேளை வி'ஷ்ணு ஆலயத்துக்கு நீ வர மாட்டாயோ என்று பார்த்தேன். பார்க்க வேண்டிய கோயில் தரிசிக்க வேண்டிய சந்நிதி. இங்கே ஈசுவர முனிகள் என்ற பட்டர், பெருமாளுக்குக் கைங்கரியம் செய்து வருகிறார் அவர் பெரிய மகான். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன் ஓரே கூட்டமாயிருக்கிறதே! கோயிலில் ஏதாவது விசேஷ உற்சவம் உண்டோ?

ஆம் இன்று ஆண்டாள் திருநட்சத்திரம். ஆடிப் பதினெட்டாம் பெருக்கோடு ஆண்டாளின் திருநட்சத்திரமும் சேர்ந்து கொண்டது் அதனால்தான் இவ்வளவு கோலாகலம். தம்பி! ஆண்டாள் பாசுரம் ஏதாவது நீ கேட்டிருக்கிறாயா? கேட்டதில்லை. கேட்காதே! அதைக் காதினாலேயே கேட்காதே!

ஏன் அவ்வளவு வைஷம்யம்? வைஷம்யமும் இல்லை விரோதமும் இல்லை உன்னுடைய நன்மைக்குச் சொன்னேன். ஆண்டாளின் இனிய பாசுரத்தைக் கேட்டு விட்டாயானால், அப்புறம் [illegible] விட்டெறிந்து விட்டு ஆண்டாளைப் போல் நீயும் கண்ணன் மேல் காதல் கொண்டு விண்ணகர யாத்திரை கிளம்பி விடுவாய்! உனக்கு ஆண்டாள் பாசுரங்கள் தெரியுமா? பாடுவாயா? சில தெரியும் வேதம் தமிழ் செய்த நம்மாழ்வார் பாசுரங்களில் சில தெரியும். பெருமாள் சந்நிதியில் பாடப் போகிறேன் வேணுமானால் கேட்டுக்கொள்! இதோ கோவி லும் வந்து விட்டது! இதற்குள் உண்மையி லேயே வீரநாராயணப் பெருமாள் கோயிலை அவர்கள் நெருங்கி வந்துவிட்டார்கள்.

விஜயாலய சோழனின் பேரனான முதற் பராந்தக சோழன் மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டம் பெற்றவன். சோழப் பேரரசுக்கு அஸ்திவாரம் அமைத்தவன் அவனே. தில்லைச் சிற்றம்பலத்துக்கு அவன் பொன் கூரை வேய்ந்து சரித்திரப் புகழ்பெற்றவன். சோழ சிகாமணி, சூரசிகாமணி முதலிய பல விருதுப் பெயர்களோடு வீரநாராயணன் என்னும் சிறப்புப் பெயரையும் அவன் கொண்டிருந்தான்.

பராந்தகனுடைய காலத்தில் வடக்கே இரட்டை மண்டலத்து ராஷ்டிரகூட மன்னர்கள் வலிமை பெற்று விளங்கினார்கள். மானிய கேடத்திலிருந்து அவர்கள் படையெடுத்து வரக்கூடுமென்று பராந்தகன் எதிர்பார்த்தான். எனவே, தனது முதற்புதல்வனாகிய இளவரசன் இராஜாதித்தனை ஒரு பெரிய சைன்யத்துடன் திருமுனைப்பாடி நாட்டில் இருக்கச் செய்தான். அந்தச் சைன்யத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கான வீரர்கள் வேலையின்றிச் சும்மா இருக்க நேர்ந்த காலத்தில் இராஜாதித்தன் ஒரு யோசனை செய்தான்.

குடிமக்களுக்கு உபயோகமான ஒரு பெரும் பணியை அவர்களைக் கொண்டு செய்விக்க எண்ணினான். வட காவேரி என்று பக்தர்களாலும் கொள்ளிடம் என்று மற்றவர்களாலும் அழைக்கப்பட்ட பெருநதியின் வழியாக அளவில்லாத வெள்ள நீர் ஓடி வீணே கடலில் கலந்து கொண்டிருந்தது. அதில் ஒரு பகுதியைப் பயன்படுத்த எண்ணித் தன் வசமிருந்த வீரர்களைக் கொண்டு கடல் போன்ற விசாலமான ஏரி ஒன்றை அமைத்தான். அதைத் தன் அருமைத் தந்தையின் பெயரால் வீரநாராயண ஏரி என்று அழைத்தான். அதன் கரையில் வீரநாராயண புரத்தை ஏற்படுத்தி அதில் ஒரு விண்ணகரையும் எடுத்தான். வி'ஷ்ணுக்கிருஹம் என்பது அந்நாளில் விண்ணகரம் என்று தமிழாக்கப்பட்டு வழங்கிற்று. ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நீரில் பள்ளிகொண்டு நீர்மயமாக இருப்பவர் அல்லவா? எனவே, ஏரிகளைக் காத்தருளுவதற்காக ஏரிக் கரையையொட்டி சரீ நாராயண மூர்த்திக்குக் கோயில் எடுப்பது அக்காலத்து வழக்கம். அதன்படி வீரநாராயணபுர விண்ணகரத்தில் வீரநாராயணப் பெருமாளைக் கோயில் கொண்டு எழுந்தருளச் செய்தான்.

அத்தகைய பெருமாளின் கோயிலுக்குத்தான் இப்போது வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் சென்றார்கள். சந்நிதிக்கு வந்து நின்றதும் ஆழ்வார்க்கடியான் பாட ஆரம்பித்தான். ஆண்டாளின் பாசுரங்கள் சிலவற்றைப் பாடிய பிறகு நம்மாழ்வாரின் தமிழ் வேதத்திலிருந்து சில பாசுரங்களைப் பாடினான்:

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத விவகார பொலிஸ் பிரிவினை வெசாக் தினத்திற்கு முன் கலைக்க வேண்டும்

## ராவணா சக்தி கோரிக்கை

(கொழும்பு)
மத விவகாரங்கள் தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் பிரிவினை உடனடியாக கலைக்க வேண்டும். இல்லையேல் மோசமான பின் விளைவுகளை அனைவரும் எதிர்கொள்ள வேண்டிவரும் என ராவணா சக்தி அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத விவகாரங்களுக்கான பொலிஸ் பிரிவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பௌத்தசாசன அமைச்சிற்கு சென்ற ராவணா சக்தி அமைப்பின் செயலாளர் இத்தேபான சத்தா திஸ்ஸ தேரர் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மதவிவகார பிரதி அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்தனவிடம் கையளித்துள்ளார்.

இதன்போது ராவணா சக்தி அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேபான சத்தா திஸ்ஸ தேரர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் மத அடக்கு முறைகள் மிகக் குறைவாகவே உள்ளது. பெரும்பான்மை இனத்தவரினால் ஒருபோதும் சிறுபான்மை மதத்தவர்கள் ஒடுக்கப்படவில்லை.

எனினும், சிறுசிறு பிரச்சினைகளை பெரிதுபடுத்தி சர்வதேச அளவில் கொண்டு செல்லவே முஸ்லிம்கள் எத்தனிக்கின்றனர். தற்போது மதப் பிரச்சினைக்கான பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளதனால் நாட்டில் மத அடக்குமுறை தலைவிரித்தாடுகின்றது என்ற செய்தி சர்வதேசத்திடம் எடுத்துச் செல்லப்படுகின்றது. இது ஒருசிலரின் திட்டமிட்ட சதித்திட்டமாகும். ஜனாதிபதி இதனை உடனடியாக கவனத்திற்கொண்டு மத விவகாரப் பொலிஸ் பிரிவினை தடைசெய்ய வேண்டும். ஒரு சில சூழ்ச்சிக்காரர்களின் கதையைக் கேட்டு ஜனாதிபதி தவறான முடிவுகளை எடுத்து விடக்கூடாது.

மேலும், எதிர்வரும் வெசாக் தினத்திற்கு முன்னர் இந்தப் பொலிஸ் பிரிவினை கலைக்க வேண்டும். இல்லையேல் மோசமான பின் விளைவுகளை அனைவரும் எதிர்கொள்ள வேண்டிவரும். இதனை நாம் கடுமையாக எச்சரித்து குறிப்பிடுகின்றோம்.

இதற்கு மேலும் மத விவகாரம் தொடர்பான பொலிஸ் பிரிவினை செயற்படுத்தினால் பௌத்தசாசன அமைச்சினுள் எமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அமைச்சுக்குள் உட்பிரவேசித்து எமது அமைப்பினர் ஆர்ப்பாட்டங்களை செய்வார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# முன்னுதாரணமாக முன்னேறும் விநாயகபுரம் கிராமம் வடமாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை

(கிளிநொச்சி)
பா.உறுப்பினர் சி.சிறீதரனின் ஏற்பாட்டில் கல்வி வளர்ச்சி கருதி கனடா மொன்றியல் மாநிலம் விக்ரோறியா றோட் மொன்றியல் வர்த்தகர்களின் அனுசரணையுடன் இன்னொரு கட்டமாக கிளிநொச்சி விநாயகபுரம் கிராமத்திற்கு அண்மையில் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்விற்கு விநாயகபுரம் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.



இதில் வடமாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை கரைச்சி பிரதேசசபை தலைவர் நாவை.குகராஜா கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் பாலாசிங்க சேதுபதி விநாயகபுரம் கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் பா. உறுப்பினர் சி.சிறீதரனின் செயலாளரும் கிளிநொச்சி கிழக்கு அமைப்பாளருமான பொன்.காந்தன் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் சர்வானந்தா மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.இதில் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்து வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்

இங்கு காணும் சூழல் மனதுக்கு மகிழ்ச்சி தருகின்றது. இந்த விநாயகபுரம் கிராமத்தின் நிர்வாக அமைப்புக்கள் இந்த கிராமமக்களின் வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்படுவதை காண முடிகின்றது.

இந்த கிராமத்தின் மாணவர்களின் நன்மை கருதி மாலையில் விடுமுறை நாட்களில் மூன்று வகுதியாக மூன்று அமைப்புக்களால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாடசாலைக்கு கல்விக்கு மேலதிகமாக நடைபெறவதை நினைக்கும் மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்த கிராமத்தின் நிர்வாகிகளை பாராட்டாமல் இருக்கமுடிய வில்லை. இந்த கிராம நல்ல விளைச்சல்களை தரக்கூடிய விளை நிலமாக தெரிகின்றது. இங்கு வழங்கபடுகின்ற கல்வி நல்ல மனிதர்களின் கருத்துக்கள் காக்கப்படும் வளர்க்கப்படும் என்று நம்பமுடியும்.
அந்த வகையில் இங்கே வழங்கப்படுகின்ற அப்பியாசக்கொப்பிகளில் இந்த கிளிநொச்சி மண்ணின் வேர்களாக இருக்கக் கூடிய குருகுலபிதா கதிரவேலு அப்புஜி கருணாநிலைய நிறுவுனர் கட்சிள் அம்மையார் நவஜீவன நிறுவுனர் தம்பிராசா போதகர் ஞானஒளி யோகர் சுவாமிகள் ஆகியோரின் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த மனிதர்கள் பற்றி அறிந்து அதன் ஒழுகக்கூடிய நல்ல மாணாக்கரை இளைய சமுதாயத்தை இந்த கிராமம் வளர்த்து வருகின்றது என்பதை இந்த கிராமத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் காணமுடியும்.இங்கே அறநெறி வகுப்புக்களுக்கும் மாணவர்கள் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இது ஆராக்கியமான சூழல். பல இடங்களில் பொது நோக்கு மண்டபங்கள் வௌவால்கள் தூங்கும் இடமாக காணப்படுகின்றது. தூசும் குப்பைகளுமாக காணப்படுகின்றன. ஆனால் இது போன்ற சில கிராமங்களில் பொது மண்டபங்கள் பயன்தரும் வகையில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாகவே இங்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் குறிப்பிட்டது போல இந்த கிராமத்தை சேர்ந்த பலர் இப்போது உத்தியோகங்களில் இருக்கின்றார்கள் பல்கலைக்கழகங்களில் படிக்கின்றார்கள் துறைசார் விடயங்களில் ஆளுமை மிக்கவர்களாக மிளிர்கிறார்கள் என்று அறியும் போது இந்த கிராமத்தை நாம் மீண்டும் நாடிவரும் ஆவல் ஏற்படு கின்றது. இன்னும் இந்த கிராமத்தின் நிறைவுறாத தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டு மென்ற கடமை உணர்வும் எங்களுக்குள் ஏற்படுகின்றது என்றார்.

# அக்ரெட் சர்வதேச அரச சார்பற்ற அமைப்பினால் போரினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



(மட்டக்களப்பு)
ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் அக்ரெட் சர்வதேச அரச சார்பற்ற அமைப்பினால் வடக்கு கிழக்கில் யுத்தத்தினல் பாதிக்கபட்ட மக்களுக்கான சமூக உந்துதல், மற்றும் வறியோர் ஆதரவு பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் ( EUSEM) கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யபட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு தொழில் செய்வதற்காக வழங்கப்பட்ட உபகரணங்களை உத்தியோக பூர்வமாக பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வும், அப்பயனாளிகழுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளுக்கான சான்றிதழ் வழ்ங்கும் நிகழ்வும் கடந்த செவ்வாய்க் கிழமை 'மட்டக்களப்பு கோப்பின் விடுதி மண்டபத்தில் நடைபெற்றது.

அக்ரட் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் தாயுல் பலாஹ், மற்றும் திட்ட உத்தியோகஸ்தர் இ.கஜேந்திரன், ஆகியோரின் ஒருங்கிணைப்பின் கீழ் இந்நிறுவனத்தின் தேசிய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ம.சுதர்சனன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம். சாள்ஸ், பஜரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் அக்ரெட் நிறுவனத்தின் இலங்கை நாட்டுக்கான வதிவிடப் பிரதிநிதி அன்று சட்டிங், செபேநெற் ஸ்ரீலங்கா அமைப்பின் செயலாளர் என்.பி.தந் திரிக்கே, மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையா ளர்கள், வங்கிகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், அக்ரெட் நிறுவனத்தின் உத்தியோகஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 11 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட முகாமைத்துவம், வியாபாரத் திட்டமிடல், கணக்கு வைப்பு முறைமை, போன்ற பல பயிற்சி நெறிகளுக்குரிய சான்றிதழ்களும், ஒரு தொழில் முயற்சியாண்மையாளருக்கு தலா 15 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் வீதம் 11 பேருக்கும் தொழில் முயற்சி உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

இவற்றுள், நெல்குற்றும் இயந்திரம், அரிசி மற்றும் ஏனைய தானியங்கள் அரைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், கோழிதீன் தயாரிக்கும் இயந்திரம், தயிர் தயாரிக்கும் இயந்திரம், மட்பாண்டம் தயாரிக்கும் இயந்திரங்கள் போன்ற பல இயந்திரங்கள் தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற சர்வதேச செஞ்சிலுவை தினம்



(மட்டக்களப்பு)
சர்வதேச செஞ்சிலுவை தினத்தினம் நேற்று மே 8ம் திகதி சர்வதேசிய ரீதியில் அனுஸ்ட்டக்கப்பட்டன. இதனை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை மட்டக்களப்பு நகரில் இலட்சனை விழிப்புனர்வு நிகழ்வொன்றினை நேற்று (08) நடாத்தியது.

இதன்போது சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவ சேவைகளுக்கான இலட்சனைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள பதின்மூன்று தனியார் மருந்த கங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட தொண்டர்கள் நேரில் சென்று இலட்சனை பற்றிய விழிப்புணர்வு நிகழ்வினை மேற்கொண்டனர்.

இதன்போது இலட்சனைகளை முறையாக பயன்படுத்துவது எவ்வாறு எனவும் தொண்டர்களால் மருந்தக உரிமையாளர்களுக்கு தெளிவூட்டப் பட்டன.

# சுழல் காற்று பெருமழையினால் மரங்கள் முறிந்து வீடுகள், படை முகாம் என்பன சேதம்!

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்க லடி பதுளை வீதிப் பகுதியில் வீசிய பலத்த மழையுடன் கூடிய சுழல் காற்றினால் மரங்கள் முறிந்து வீடுகள், படை முகாம் என்பன சேதமடைந்திருப்பதாக ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் உருத்திரன்-உதயஸ்ரீதர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் திடீரென ஏற்பட்ட சூறைக்காற்றினாலும் பலத்த மழையினாலும் மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டும் வீட்டுக் கூரைகள் காற்றினால் வீசப்பட்டும் உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. மட்டக்களப்பு செங்கலடியிலுள்ள வீடொன்றிலிருந்த பெரிய பலாமரம் வேரோடு சாய்ந்து வீட்டின் மீது வீழ்ந்துள்ளது. எனினும் வீட்டில் சிறு குழந்தைகள் இருந்த போதும் தாங்கள் உயிராபத்தின்றி தெய்வானதீனமாக தப்பிவிட்டதாக குடியிருப்பாளர் கதிரவேலு கனகாம்பிகை தெரிவித்தார்.

இதேவேளை ஏறாவூர்ப்பற்று பதுளை வீதி தும்பாலஞ்சோலைக் கிராமத்தில் இருந்த படைமுகாம் ஒன்று பகுதியளவில் சேதமடைந்திருப்பதோடு அங்கு குடியிருப்பாளரின் ஒரு வீடு முழுமையாகவும் மற்றொரு வீடு பகுதியளவிலும் சேதமடைந்திருப்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை மீதான**

இராஜதந்திரிகள் கூறியுள்ளனர்.

இந்நிலையில், இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதில் ஏற்படும் காலதாமதம் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் மூன்றாவது தீர்மானத்தை கொண்டு வந்த சில நாடுகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், இந்த சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதில் ஏற்படும் காலதாமதத்தால், அதன் பணிக்காலம், நீடிக்கப்படக்கூடும் என்றும் இந்நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன.

அதேவேளை, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஜுலை மாதம் ஓய்வு பெறுவதற்கு முன்னதாக, விடுமுறையில் செல்லக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், அதற்கு முன்னதாக இந்த சர்வதேச விசாரணைப் பொறி முறை உருவாக்கப்பட்டு, செயற்பட ஆரம்பிக்க வேண்டும் என தனது அதிகாரிகளிடம் நவநீதம்பிள்ளை கூறியுள்ளதாக ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியக அதிகாரிகளுடன் நவநீதம்பிள்ளை கலந்துரையாடி வருவதாகவும் குறித்த இராஜதந்திரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், இவ்விசாரணைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பை பெறுவது மற்றும் வெளிப்படையான செயல்முறை தொடர்பில் நவநீதம்பிள்ளை கவனம் செலுத்தி வருவதாகவும் இந்த இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளதாக இவ்வூடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக் கொடி விவகார வழக்கில் அரச தரப்புக்கு நெருக்கமானவராக மாறிய பிரெட்ரிக்கா ஜேன்ஸ், இப்போது அவர்களின் பழிவாங்கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதன் காரணமாக ஏராளமான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**போராளிகளை**

இது தொடர்பான நிகழ்வு கடந்த வருடமும் இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தடை செய்யப்பட்ட இயக்கமாகும்.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தனிநபர் ஒருவர் தீபம் ஏற்றுவது, அவரது தனிப்பட்ட உரிமையாகும். இதனை, கூட்டிணைந்து அல்லது அமைப்பாக மேற்கொள்ள முடியாது. இந்த வித்தியாசத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**சமூக வலைத்தளங்கள்**

குறித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க சட்ட விதிகள் உள்ளதாகவும் இலங்கை இந்த கொள்கையை கடைபிடிக்கும்.

மாற்று திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது குறித்து உயர் நீதிமன்றமும் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் அதற்கமைய செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் காணப்படும் வேலை வாய்ப்புக்களில் 3மூ மாற்று திறனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என சட்டம் உள்ளதாகவும் மாற்று திறனாளிகளுக்கு 250,000 ரூபா வீட்டுக் கடன் வழங்கப்படுவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

**பாராளுமன்ற**

தேசிய இனப்பிரச்சினை குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கும் ஏக அதிகாரம் பாராளுமன்றிற்கே காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவினை புறக்கணித்தாலும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் தொடரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஊடகவியலாளர்**

இந்நிலையில் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அவரது பெயர் நீக்கப்பட்டு, ஏனைய இரண்டு பேருக்கும் எதிராக வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்தது.

கடந்த வழக்கு விசாரணை தினத்தின்போது பிரெட்ரிக்கா ஜேன்ஸ் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இதனையடுத்து பொலிசாரின் வேண்டுகோளுக்கு இணங்க அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**முன்னாள் போராளிகளுக்கு**

யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வாழ்ந்து வரும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கைதிகள் விவகாரம் காணாமல் போனவர்கள் விவகாரம் போன்றன தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பல்வேறு உதவிகளை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## செய்தி நிறுவனங்களை தண்டிக்கக்கூடாது அமெரிக்காவை இலங்கை பின்பற்ற வேண்டும் என கோரிக்கை

அமெரிக்காவில் தமது பணிகளை செய்யும் செய்தி நிறுவனங்கள் தண்டிக்கப்படுவதில்லை. இதனையே இலங்கையும் பின்பற்ற வேண்டும் என்று ஆசைப்படுவதாக அமரிக்கா பொதுநிர்வாகத்துக்கான உதவி செயலாளர் டௌவக் பிரான்ட்ஸ் நேற்று தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள அமெரிக்க நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது வீடியோ மாநாட்டு திரையின் மூலம் அவர் பங்கேற்றார்.

இதன்போது எட்வேட் ஸ்னோடென் மிகவும் இரகசியமான கோவைகளை வெளியிட்ட போது அமெரிக்கா அரசாங்கம் எவ்விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை பிரான்ட்ஸ் உதாரணமாக காட்டினார்.

இந்த ஆவணம் வெளியானமைக்காக அமரிக்க அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. செய்தி நிறுவனம் தமது பணியை செய்ததாக அமெரிக்கா அதனை கருதியது.

அப்படியிருந்தும் அமெரிக்கா உலக ஊடக சுதந்திர தரப்படுத்தலில் 32வது இடத்தில் இருந்து 2013 ம் ஆண்டில் 46வது இடத்துக்கு தள்ளப்பட்டதாக பிரான்ட்ஸ் குறிப்பிட்டார்.







PUBLIC LIBRARY JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன்காரரான யுவராஜ் மத்திய கலால் துறை நோட்டீஸ்



விளம்பர வருமானத்தில் இருந்து பெற்ற ரூ.4.14 கோடிக்கு, சேவை வரி பாக்கி வைத்ததற்காக மத்திய கலால் துறை யுவராஜ்க்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.
இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்டக் காரர்களில் ஒருவரான யுவராஜ் சிங், ஐ.பி.எல் போட்டியில் பெங்களூர் அணிக்காக விளையாடி வருகின்றார்.

இந்நிலையில் சகாரா நிறுவனத்தில் விளம்பரம் மூலம் அவர் ரூ.4.14 கோடி வருமானம் பெற்றார். இதற்காக யுவராஜ் சிங்குக்கு மத்திய கலால் துறை சேவை வரி விதித்திருந்தது.
யுவராஜ் சேவை வரியாக ரூ.36 லட்சம் கட்டியுள்ளார். ஆனால் ரூ.46.60 லட்சம் சேவை வரி கட்டாமல் பாக்கி வைத்து இருந்துள்ளார்.

இந்த சேவை வரி பாக்கிக்காக மத்திய கலால் துறை யுவராஜ்சிங்குக்கு விளக்க நோட்டீஸ் அனுப்பியுள்ளது. சண்டிகரில் உள்ள யுவராஜின் வீட்டின் வாசல் கதவில் இந்த விளக்க நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

## களைகட்டப் போகிறது ISL கால்பந்து. கொச்சி - கொல்கத்தா அணிகளை டெண்டுல்கர்- கங்குலி வாங்கியுள்ளனர்.



மும்பை அணியை ரன்பீர் கபூர், புனே அணியை நடிகர் சல்மான்கான், குவஹாத்தி அணியை நடிகர் ஜான் ஆப்ரஹாம் வாங்கியுள்ளனர்:-

இந்தியன் சூப்பர் "லீக்" கால்பந்து (ஐ.எஸ்.எல்)போட்டிக்கான கொச்சி அணியை டெண்டுல்கரும் கொல் கத்தா அணியை கங்குலியும் வாங்கியுள்ளனர். இந்தியாவில் பிரபலமான ஐ.பி.எல். (இந்தியன் பிரீமியர் லீக்), இந்தியன் பட்மின்டன் லீக் போன்று இந்தியன் கால்பந்து லீக் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இந்தியன் சூப்பர் "லீக்" கால்பந்து போட்டி தொடர் வருகிற செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நடைபெறுகிறது. இது இந்தியாவில் முதன்முதலாக ஆரம்பிக்கப்படும் கால்பந்து போட்டி ஆகும். இதில் உலகளாவிய மற்றும் இந்திய கால்பந்து வீரர்கள் விளையாட உள்ளனர்.

மும்பை, கொல்கத்தா, சென்னை, டெல்லி, குவஹாத்தி, பெங்களூர், கொச்சி, கோவா, புனே ஆகிய 9 நகரங்களைக் கொண்ட அணி உள்ளன. இந்த இடங்களில் உள்ள அணிகளுக்கான ஏலம் நடத்தப்பட்டுள்ளது. ஏலத்தில் ஐ.பி.எல். உரிமத்தை வைத்துள்ள சில அணிகள் ஆர்வம் காட்டியுள்ளன.

கொச்சி அணியினை கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் வாங்கியுள்ளார். கொல்கத்தா அணியினை முன்னாள் கேப்டன் கங்குலி வாங்கியுள்ளார். மும்பை அணியை பாலிவுட் நடிகர் ரன்பீர் கபூர், புனே அணியை நடிகர் சல்மான்கான், குவஹாத்தி அணியை நடிகர் ஜான் ஆப்ரஹாம் வாங்கியுள்ளனர்.

# பேட்டை எறிந்த விவகாரம். ஸ்டார்க், பொல்லார்டுக்கு அபராதம்

பெங்களூர்- மும்பை போட்டியின் போது மோதலில் ஈடுபட்ட ஸ்டார்க் மற்றும் பொல்லார்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை இந்தியன்ஸ்பெங்களூர் றொயல் சேலஞ்சர்ஸ் அணிகள் இடையிலான ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

இந்த போட்டியின் 17வது ஓவரின் போது மும்பை அணியின் துடுப்பாட்டக்காரர் பொல்லார்ட மற்றும் பெங்களூர் அணியின் பந்து வீச்சாளர் ஸ்டார்க் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கடும் மோதலாக வெடித்தது.

இதில் ஆத்திரம் அடைந்த பொல்லார்ட், ஸ்டார்க்கை நோக்கி மிகவும் ஆக்ரோ'மாக பேட்டை வீசினார். அதி'டவசமாக கை நழுவியதால் ஸ்டார்க் தலைதப்பினார்.

இந்த தகராறு மைதானத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. நடுவரின் விசாரணையின் கீழ் இருவரும் தங்கள் தவறை ஒப்புக்கொண்டதால் பொல்லார்டுக்கு போட்டி கட்டணத்தில் 75 சதவீதமும், ஸ்டார்க்குக்கு போட்டி கட்டணத்தில் 50 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி பெங்களூர் றொயல் சேலஞ்சர்ஸ் அணியின் பயிற்சியாளர் வெட்டோரி, வீரர்கள் களத்தில் மோசமாக நடந்து கொண்டதற்கு அதிருப்தி தெரிவித்ததுடன், ஆடுகளத்தில் இதுபோன்ற பிரச்சினைகளை நாங்கள் பார்க்க விரும்பவில்லை என்றும் கூறியுள்ளார்.

# ஐ.பி.எல் மைதானத்தில் வாக்குவாதம் கடும் மோதலாக மாறியது

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் இடையிலான லீக் ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்தது.

இந்த போட்டியில் மும்பை அணி துடுப்பெடுத்தாடுகையில், 17வது ஓவரின் போது பொல்லார்ட், பெங்களூர் அணி பந்து வீச்சாளர் ஸ்டார்க் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கடும் மோதலாக வெடித்தது. இதில் ஆத்திரம் அடைந்த பொல்லார்ட், ஸ்டார்க்கை நோக்கி ஆக்ரோ'மாக பேட்டை வீசினார். கைநழுவியதால் ஸ்டார்க் தலைதப்பினார். நடுவர்களும், சக வீரர்களும் சமாதானப்படுத்தினார்கள்.

மைதானத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த தகராறு குறித்து போட்டி நடுவர் விசாரணை நடத்தினார். இருவரும் தங்கள் தவறை ஒப்புக்கொண்டு வருத்தம் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து பொல்லார்டுக்கு போட்டி கட்டணத்தில் 75 சதவீதமும், ஸ்டார்க்குக்கு போட்டி கட்டணத்தில் 50 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டது.
வீரர்கள் களத்தில் மோசமாக நடந்து கொண்டதற்கு பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணியின் பயிற்சியாளர் வெட்டோரி அதிருப்தி தெரிவித்துள்ளார். கிரிக்கெட் ஆடுகளத்தில் இதுபோன்ற பிரச்சினை பார்க்க நாங்கள் விரும்பவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.


**மிகக் குறைந்த கட்டணத்தில் புதியவனில் விளம்பரம் செய்யுங்கள்**

தேசிய நாளிதழ்களுக்கு நிகராக மன்னாரில் இருந்து வெளிவரும்
புதியவன் நாளிதழிதலில் மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்கலாம்

வீடு, காணி விற்பனை
வீடு, கடை வாடகை
வாகன விற்பனை/வாடகைக்கு
திருமண சேவை
செல்லப்பிராணிகள் விற்பனைக்கு
கல்விச் சேவை

ஆகிய வற்றுக்கான விளம்பரங்களை வெறும் 400/= ரூபாவில் இருந்து பிரசுரிக்கலாம்.

மரண அறிவித்தல், 31ஆம் நாள் அறிவித்தல், பிறந்த நாட்கள் ரூபாய் 500/= மட்டுமே.

ஏனைய அனைத்து விளம்பரங்களுக்கும் ரூபா 500/= இல் இருந்து அறவிடப்படும்

இன்றே அழையுங்கள். உங்கள் அனைத்து வியாபாரத் தொடர்புகளும் நன்றே பெருகிட வாருங்கள் புதியவன் அலுவலகத்திற்கு இல்லையேல் அழையுங்கள் கீழ்வரும் அலைபேசி இலக்கங்களிற்கு.

விளம்பரப்பிரிவு புதியவன் பிரதான விதி, மன்னார். 0232223545/0778355464 0771770503


இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தில் 09.05.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org